தமிழ்நாடு
# நுகர்விழி
நுகர்வோரின் மூன்றாவது கண்! மாத இதழ்
www.tncpo.com
10/- மலர் - 16 இதழ் - 01 ஜனவரி - 2022 TAMILNADU NUGARVIZHI
facebook TNCPO Chennai

# கேன்வாட்டர் பயன்படுத்து பவர்களா?



## விஷமாகும் பாஸ்ட்ஃபுட்!

PUBLISHED BY: TAMILNADU CONSUMER PROTECTION ORGANISATION CHENNAI

## தமிழ்நாடு நுகர்விழி மாத இதழின் வாசகர்களுக்கு
## இனிய கிறிஸ்துமஸ் - புத்தாண்டு நல்வாழ்த்துகள்!



**Dr. D.C.ஜான்இளங்கோ**
மாநிலத் தலைவர் மற்றும்
காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட
நுகர்வோர் அமைப்பின் தலைவர்
81227 35037



**K.தாந்தோணி**
மாநிலச் செயலாளர்
தமிழ்நாடு
99625 26601



**D.விஜய்**
மாநில துணைத் தலைவர்
99404 77815



**A.விஜயகுமார்**
மாநில பொருளாளர்
80720 31115



**M.R.ஆனந்தன்**
மாநில துணைச் செயலாளர்
98846 68673



**M.பிரபாகர்**
மாநில இணைச் செயலாளர்
94443 31396



**சிந்து R.சுப்பிரமணியம்**
மாநில துணைப்பொதுச் செயலாளர்,
திருப்பூர் மாவட்டத் தலைவர்
98431 88657



**K.தனசேகர்**
மாநில துணை பொதுச் செயலாளர்
98410 91317



**M.ரவி**
மாநில நிர்வாகக் கமிட்டி ஆலோசகர்
92827 47175



**A. விவேக்**
மாநில இயக்குனர்,
தரக்கட்டுப்பாடு குழு
97899 66012



**J.செல்வம்**
மாநில துணைப் பொதுச் செயலாளர்
82200 82727



**M.பாலாஜி**
மாநில நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்
96001 11522



**M.சுரேஷ்குமார்**
தேசிய நிர்வாக ஆலோசகர்
மற்றும் மாநில இணை ஒருங்கிணைப்பாளர்
96772 79744



**T.S.K. கில்கிரிஸ்ட்**
தேசிய ஒருங்கிணைப்பாளர்
87544 44358



**V.பாலாஜி**
வடசென்னை மாவட்டத் தலைவர்
89251 37737



**S. ஜெகன்பாபு**
மாநில உதவிச் செயலாளர்,
திருவல்லிக்கேணி பகுதி தலைவர்
98842 37456

**பேரமைப்பின் மாநில நிர்வாகிகள்**

ADVT

தமிழ்நாடு

# நுகர்விழி

நுகர்வோரின் மூன்றாவது கண்!

மாத இதழ்

## வாசகர் கவனத்திற்கு

தமிழ்நாடு நுகர்விழி வாசகர்கள் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவை வரவேற்று தங்களை பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் தங்களின் கருத்துக்கள், கட்டுரைகள், வினாக்கள், விமர்சனங்கள், தங்கள் பகுதியில் பொது மக்களுக்கு செய்த உதவிகள் போன்றவற்றை எங்க ளுடைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள் கிறேன். நாங்கள் அதை இப்புத்தகத்தில் பிரசுரிக்கிறோம்.

நன்றி, வணக்கம்.

**அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:**


ஆசிரியர்

**தமிழ்நாடு நுகர்விழி**

எண்.359 G, கொன்னூர் நெடுஞ்சாலை
பில்கிங்டன் சாலை சந்திப்பு (சயானி
தியேட்டர் பஸ் நிலையம் அருகில்)
அயன்புரம்,
சென்னை – 600 023.
தொலைபேசி எண்: 044–43324844
கைபேசி எண்: 9444909993



இதழில் வெளிவரும் விளம்பரங்கள் நம்பகத் தன்மைக்கு “தமிழ்நாடு நுகர்விழி” பொறுப்பல்ல. நேர்காணல் மற்றும் சிறப்பு கட்டுரையாளரின் கருத் துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துகளே. பிரஸ் அண்டு ரெஜிஸ்ட்ரேஷன் ஆஃப் புக்ஸ் ஆக்டின்படி செய்திகளின் தேர்வுக்கு செய்தி நிர்வாக ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.


## உள்ளே...


உணவு பாதுகாப்புச் சட்டம் 5

சிந்தவும் ஒரு சொட்டு கண்ணீரில்லை 6

கேன்வாட்டர் பயன்படுத்து பவர்களா? 11

விஷமாகும் பாஸ்ட்ஃபுட்! 20

# சமையல் எரிவாயு சிலிண்டர் வாங்கும் நுகர்வோர் கவனத்திற்கு !

கேஸ் சிலிண்டர்களுக்கு வழங்கப்படும் மானியம் வெகுவாக குறைந்துள்ளதால் பொதுமக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். இன்னொரு பக்கம் கேஸ் சிலிண்டர் மானியத்திற்காக வங்கி கணக்கு ஓபன் செய்தவர்கள் பலருக்கு வங்கி கணக்கில் போதிய இருப்பு இல்லை அபராதமும் விதிக்கப்படுகிறது. இதனால் மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஆரம்பத்தில் வழங்கப்பட்ட கேஸ் மானியம், படிப்படியாக குறைந்ததுள்ளது. வங்கி கணக்கில் அவர்களுக்கு உரிய மானியம் கிடைக்காமல் உள்ள நிலையில், மினிமம் பேலன்சை பராமரிக்க முடியாததால் அபராதத்தை சந்தித்து வருகிறார்கள் மக்கள். ஜன்தன் கணக்கு ஓபன் செய்தவர்களுக்கு மட்டும்தான் அபராதம் விதிக்கப்படவில்லை. ஜன்தன் அல்லாத பல கோடி கணக்குகளுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

கேஸ் மானியம் நம் நாட்டில் ஒரு குடும்பம் ஆண்டுக்கு 12 சிலிண்டர்கள் மட்டும் மானிய விலையில் பெறலாம் என்பது அரசின் விதி. இதற்கான மானியத்தொகை வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. 12 சிலிண்டருக்கு மேல் தேவைப்படும் சிலிண்டர்களை மானியம் இல்லாமல் தான் வாங்க முடியும். சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலையின் நிலவரத்துக்கு ஏற்ப மானியம் இல்லாத சமையல் கேஸ் சிலிண்டர் மற்றும் வர்த்தக பயன்பாட்டுக்கான கேஸ் சிலிண்டர் விலை மாதந்தோறும் மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது.

எவ்வளவு கிடைக்கிறது கடந்த 2019 டிசம்பர் மாதம் கேஸ் சிலிண்டர் விலை ரூ.714 ஆகவும், மானியம் ரூ.174.72 ஆகவும் இருந்தது. கடந்த ஆண்டு மே மாதம் சிலிண்டரின் விலை ரூ.569 ஆக இருந்தது. ஆனால் மானியம் கொடுக்கப்படவில்லை. அடுத்த சில மாதங்களில் சிலிண்டரின் விலை ரூ.606 முதல் ரூ.881 வரை வெவ்வேறு விலைகளில் நிர்ணயம் செய்யப்பட்டது. அப்போது வாடிக்கையாளர்களுக்கு மானியமாக வெறும் ரூ.25.45 மற்றும் ரூ.23.95 என வெவ்வேறு தொகை செலுத்தப்பட்டது. கடந்த டிசம்பரில் சிலிண்டர் விலை ரூ.710 ஆனது. அதற்கான மானியமாக ரூ.24.95 வாடிக்கையாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டிருக்கிறது.

விலை உயர்வு கடந்த ஜனவரி மாதம் கேஸ் மானியமாக ரூ.65.14 வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 2.38 கோடி கேஸ் வாடிக்கையாளர்கள் உள்ளார்கள் இவர்களில் 32 லட்சம் பேர் தாமாக முன்வந்து மானியத்தை விட்டுக் கொடுத்துள்ளார்கள். விட்டுக்கொடுக்காதவர்களில் பெரும்பாலானவர்கள் என்று பார்த்தால் கொரோனா பேரிடரால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர ஏழை மக்கள்தான். சிலிண்டர் விலை கிடுகிடுவென உயர்ந்து வரும் நிலையில், மானியத்தொகை குறைக்கப்பட்டிருப்பதும் மக்களிடையே கோபத்தை ஏற்படுத்தி உள்ளது.

மத்திய அரசு கையில் ஏற்கனவே பலருக்கு மானியம் வங்கி கணக்கில் வரவு வைக்கப் படுவதில்லை என்றும், செல்போன்களுக்கு குறுஞ்செய்தி வருவதில்லை என்றும் குற்றச்சாட்டு உள்ளது. மானியத்தொகை குறைக்கப்பட்டிருப்பது அறிந்து கொள்ளும் வாடிக்கையாளர்கள் நேராக கேஸ் சிலிண்டர் ஏஜென்சிகளுக்கு சென்று வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார்கள். இதுகுறித்து எண்ணெய் நிறுவனங்கள் கூறும்போது, 'பெட்ரோலிய அமைச்சகம் தான் மானியத்தொகையை நிர்ணயம் செய்கிறது. அவர்கள் குறிப்பிடும் தொகையை மட்டுமே எண்ணெய் நிறுவனங்கள் வசூலிக்கின்றன' என்றார்கள்.

இதனிடையே மக்கள் இன்னொரு பேரிடியாக மானிய தொகை கிடைக்கும் என்று நினைத்து வங்கி கணக்கு ஓபன் செய்த பலர், மானிய தொகையும் கிடைக்காமல், வங்கி கணக்கில் மினிமம் பேலன்சை பராமரிக்க முடியாமல் தவிக்கிறார்கள். இதனால் அவர்களின் பலரது கணக்கு மைனசில் போய் உள்ளது. இந்த சூழலில் தான் பெட்ரோல் டீசல் மீது வரிகள் உயர்த்தப்பட்டுள்ளது. சிலிண்டர் விலையும் 25 ரூபாய் இந்த மாதம் உயர்த்தப்பட்டுள்ளது



டாக்டர்
**N.கண்ணையா**, Phd
முதன்மை ஆசிரியர்



**C.பால் பர்ணபாஸ்**
நிர்வாக ஆசிரியர்
மற்றும் வெளியீட்டாளர்

# உணவு பாதுகாப்பு சட்டம் அமல்!



ரேஷன் கடைகளில் அதிரடி ஆய்வு உணவு பாதுகாப்பு சட்டம் நேற்று முதல் அமலுக்கு வந்ததால் அதிகாரிகள் ரேஷன் கடைகளில் அதிரடி ஆய்வில் ஈடுபட்டனர். தமிழக ரேஷன் கடைகளில் 1.91 கோடி அரிசி கார்டுதாரர்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது. தமிழக அரசு மத்திய அரசின் உணவு பாதுகாப்பு சட்டத்தை முதல் அமல்படுத்தியது. அதன்படி நான்கு பேருக்கு கீழ் உள்ள குடும்பத்துகுகு தற்போது ரேஷனில் வழங்கப்படும் அதே அளவில் இலவச அரிசி வழங்கப்படும்.

25 கிலோ இலவச அரிசி ஐந்து பேர் உள்ள குடும்பத்துக்கு வழங்கப்படும், 20 கிலோ அரிசிக்கு பதில், 25 கிலோ இலவசம் அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா ஐந்து கிலோ அரிசி கூடுதலாக இலவசமாக வழங்கப்பட இருக்கிறது. இதையடுத்து ரேஷன் கடைகளில் உணவுத்துறை அதிகாரிகள் உணவு பாதுகாப்பு சட்டம் அமலுக்கு வந்து உள்ளதால் ரேஷன் கடைகளுக்கு கூடுதலாக அரிசி வழங்கப்பட்டுள்ளது.

எனவே அரசு நிர்ணயித்துள்ள அளவில் ஊழியர்கள் அரிசியை வழங்குகிறார்கள் என்பதை கண்காணிக்க ஆய்வு செய்யப்படுகிறது. மொத்தமாக அரிசியை எடுத்து செல்ல முடியாதவர்கள் இரண்டு தவணைகளில் பெறலாம். இந்த சட்டத்தால் அரிசி மானியத்துக்காக மாநில அரசுக்கு 1,193 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

ரசீது வழங்க கருவி:

ரேஷன் கடைகளில் உணவு பொருட்கள் வாங்கும் போது காகித ரசீது வழங்கப்படுகிறது. இதில் முறைகேடுநடப்பதால் நவீன கருவியில் ரசீது போட முடிவு செய்யப்பட்டது. இதற்காக தற்போது ரேஷன் கடைகளில் பாயின்ட் ஆப் சேல் என்ற கருவி வழங்கப்பட்டுள்ளது. அதில் ரசீது போடும் போது. அந்த விபரம் கார்டுதாரருக்கு. எஸ்.எம்.எஸ் மூலம் தெரிவிக்கப்படும். அனைத்து ரேஷன் கடைகளிலும் கருவி மூலம் ரசீது போடும் முறை செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இது குறித்து உணவுத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது தமிழகத்தில் 34 ஆயிரத்து 776 ரேஷன் கடைகள் உள்ளன. அதில் 70 சதவீத கடைகளில் அக்.,1 முதல் பாயின்ட் ஆப் சேல் கருவியில் ரசீது போடப்பட்டது. நேற்று முதல் அனைத்து கடைகளிலும் கருவி மூலம் தான் ரசீது போடப்படும். எனவே ரேஷன் கார்டுதாரர்கள் தங்கள் மொபைல் போன் எண்ணை ரேஷன் கடைகளில் உடனே பதிவு செய்ய வேண்டும்.

# சிந்தவும் ஒரு சொட்டு கண்ணீரில்லை...




சுமார் ஐம்பது வருடங்களாக கியூபாவை ஆண்டு வந்த ஃபிடல் காஸ்ட்ரோ ஓய்வு பெற்று விட்டார். காஸ்ட்ரோவின் ஓய்வு வெறும் ஒரு மனிதனின் ஓய்வல்ல இது ஃபிடலிஸ்மோ என்றழைக்கப்படும் ஒரு சித்தாந்தத்தின் அழிவு கியூபர்கள் இதற்காக வருந்தவுமில்லை கண்ணீர் சிந்தவுமில்லை ஏனெனில் காஸ்ட்ரோவுக்காகவும் அவர் கொள்கைகளுக்காகவும் சிந்த அவர்களிடம் ஒரு சொட்டு கண்ணீருமில்லை அனைத்தும் கடந்த ஐம்பதாண்டுகளிலேயே வற்றி விட்டது. தனது வாழ்நாளில் கியூபாவை முடித்துக்கட்டுவதே காஸ்ட்ரோவின் நோக்கமாக இருந்தது. அதில் அவர் ஓரளவு வெற்றியும் பெற்றார் என்றே சொல்ல வேண்டும். செப்டெம்பெர் 2005 லிருந்து செப்டெம்பர் 2007 க்குள் சுமார் 77,000 கியூபர்கள் கள்ளத்தோணி, படகு, மரக்கட்டை என்று கிடைத்ததில் தொத்திக்கொண்டு கியூபாவை விட்டு ஃப்ளோரிடாவுக்கு தப்பி ஓடினர் கியூபாவை விட்டு தப்பி ஓடுவது பெரும் ரிஸ்க். கியூபா கடற்படையிடம் பிடிபட்டால் கேள்விகள் ஏதுமின்றி உடனே துப்பாக்கி சூடுதான் நடத்துவார்கள் ஒருவர் தப்பி ஓடினால் கியூபாவில் இருக்கும் அவர் குடும்பம் குழந்தைகள் உட்பட கொல்லப்படுவார்கள். அதனால் தான் கியூபாவை விட்டு ஓடுபவர்கள் குழந்தை குட்டியுடன் ஓடி ஒன்று குடும்பத்துடன் தப்புவார்கள் அல்லது பிள்ளை குட்டியுடன் கடலில் சுடப்பட்டு சாவார்கள் இதுவரை இப்படி சுட்டுக்கொல்லப்பட்ட கியூபர்கள் மட்டும் சுமார் 40,000 பேர்.

சர்வதேச மனித உரிமைகழகம் குழந்தைகளை பிணைகைதிகளாக பிடிக்கும் கியூப அரசின் செயலை வன்மையாக கண்டித்திருக்கிறது. ஆனால் பலன் என்னவோ பூஜ்ஜியம்தான். 2 வருடத்தல் 77,000 பேரை ஓடவிட்டது காஸ்ட்ரோவின் சமீபத்திய சாதனை இதற்குமுன் 1980ல் 125,000 கியூபர்கள் இதேபோல் ஓடித்தப்பினர் அந்த நிகழ்ச்சி மேரியல் ஃபோட்லிப்ட் என அழைக்கப்படுகிறது. இப்படி ஃப்ளோரிடாவில் குடியேறிய கியூபர்கள் இன்னமும் காஸ்ட்ரோவின் மீது அடங்காத வெறுப்புடன் இருக்கின்றனர். கியூபாவுடன் உறவை மேம்படுத்த முயலும் எந்த அமெரிக்க அதிபரின் கட்சியையும் அடுத்த தேர்தலில் மண்ணை கவ்வ வைக்கும் சக்தி இவர்களுக்கு இருப்பதால் கியூபா–அமெரிக்கா உறவு ஊசலாட்டத்திலேயே இருக்கிறது.

இதற்கு காஸ்ட்ரோ காலில் விழாத குறையாக அமெரிக்க அரசிடம் கெஞ்சிப் பார்த்துவிட்டார். கியூபாவின் க்வாண்டனாமோ சிறையில் தலிபான் தீவிரவாதிகளை அமெரிக்க அரசு அடைத்தபோது கியூபா அதற்கு எதிராக பெரும் எதிர்ப்புக்குரல் எழுப்பும் என

எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காஸ்ட்ரோ க்வாண்டமானோவில் இருந்து தப்பும் தலிபான் தீவிரவாதிகளை கியூபா ராணுவம் சிறைபிடித்து அமெரிக்க அரசிடம் ஒப்படைக்கும் என்று அறிவித்துவிட்டார் பல்டியிலும் பெரிய அந்தர்பல்டியான இதைக்கண்டு எஞ்சியிருக்கும் பிடலிஸ்மோக்கள் வாயடைத்து போயினர்.

இதனை பெரிய பல்டிக்கு பிறகும் அமெரிக்க அரசு மனம் இரங்காததற்கு காரணம் கியூபா அமெரிக்கர்கள்தான். ரவுல் காஸ்ட்ரோ, கோர்பசேவ் பாணியில் பெரஸ்திரோயிகாவை அறிமுகப்படுத்தி பழைய தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டால் அவர்கள் மனம் மாறலாம். ஆனால் ரவுல் காஸ்ரோ தவறுகள் நடந்துள்ளன. உணவு உற்பத்தி அதலபாதாளத்தில் உள்ளது. ஊழல் தாண்டவமாடுகிறது என்று அறிவித்தார். அதன்பின் வழக்கம் போல் ஒன்றும் நடக்கவில்லை. கியூபர்கள் இதனால் எல்லாம் ஒன்றும் புதிதாக ஏமாறவில்லை 50 வருடமாக காஸ்ட்ரோக்கள் நடத்தும் இம்மாதிரி உதார்கள் அவர்களுக்கு பழக்கப்பட்ட ஒன்று ஒட்டுபோட்டு தமது எதிர்ப்பை காட்டமுடியாத மக்கள் வழக்கம்போல் கால்கள் மூலம் எதிர்ப்பை காட்டமுடியாத மக்கள் வழக்கம்போல் கால்கள் மூலம் எதிர்ப்பை காட்டினார்.



அதாவது குடும்பம், குடும்பமாக கூட்டம் கூட்டமாக கியூபாவை விட்டு ஒடித்தப்பினர். ஓட முடியாதவர்கள் போராட்டத்தில் குதித்தனர். ஹவானா பல்கலைகழகம் சாண்டியாகோ பல்கலைகழக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். இணையம் ஊடகம் என எந்த வலுவுமில்லாத இப்போராட்டங்கள் இரும்புக்கரம் கொண்டு வழக்கம்போல் அடக்கப்பட்டன.

இன்று கியூபாவின் நிலை மிகவும் வருந்தத்தக்க ஒன்று கியூபர்கள் உட்கொள்ளும் உணவின் அளவு மிகவும் குறைந்துவிட்டது. 2006ல் கியூபா ஜனத்தொகை வளர்ச்சி நெகடிவாக இருந்ததாக கியூபா அரசே தெரிவிக்கிறது. வெனிஸ்வேலா அரசு அளிக்கும் உதவித்தொகையில்தான் வண்டி ஓடுகிறது. கியூபாவின் மருத்துவத்துறை ஃபிடல்ஸ்மோக்களால் மிகவும் சிலாகிக்கப்பட்ட ஒன்று (டாக்டருக்கு மாதம் வெறும் 15 சம்பளம் கொடுத்தால் மருத்துவ செலவு குறைவாகத்தான் இருக்கும்? அதனால் தான் கியூபாவை விட்டு ஓடுபவர்களில் டாக்டர்கள் முதலிடத்தில் இருக்கிறார்கள்)

ஆனால் இந்த குறைந்த செலவு மருத்துவத்தின் பலனை முழுக்க முழுக்க நுகர்பவர்கள் வெளிநாட்டினர்தான். மெடிக்கல் டூரிசத்தின் வளர்ச்சியால் வருடம் சுமார் 20 லட்சம் வெளிநாட்டு டூரிஸ்டுகள் இங்கே வந்து 80% குறைவான செலவில் சிகிச்சை பெற்று திரும்புகின்றனர். அரசுக்கும் காசு திரட்ட இதை விட்டால் வேறு வழியில்லை உள்ளூர் மக்களுக்கு வழக்கம் போல் அல்வாதான் சராசரி கியூபர்கள் டாக்டர்களை பார்த்தே பல வருடம் இருக்குமாம். இத்தனை பிரச்சனைகள் இருக்க நெரிசலான சாலை ஒன்றில் கியூபாவுக்கு உண்டியல் குலுக்கிக் கொண்டிருந்த காம்ரேட் ஒருவரை பார்த்ததும் ஒரு நிமிடம் நின்றேன். இவர் குலுக்கும் குலுக்கலில் கியூபா பொருளாதாரம் நிமிர்ந்து மீண்டும் உலகெங்கும் கம்யூனிசம் மலர்ந்துவிடுமோ என்றே தோன்றியது. அத்தனை வேகத்துடன் குலுக்கிக் கொண்டிருந்தார். கனவுகள் தான் எத்துணை அழகானவை?

# கேள்விகுறியாகும் மாணவர்களின் எதிர்காலம்

- அதிர்ச்சி தகவல்.



கல்வியின் தரம் மாறிவிட்டதா? அச்சத்தில் உறையும் ஆசிரியர்கள். பெரியோர்களை மதித்து நடந்தால் சக மாணவர்களுடன் ஆரோக்கியமான போட்டிகளில் ஈடுபடுதல் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் நாவடக்கம் பேணுதல் போன்றவை குருகுலத்தில் கற்பிக்கப்பட்டது. குருகுலத்தில் பல சட்டதிட்டங்கள் இருக்கும் அது மாணவனுக்குக் குருவால் அறிவுறுத்தப்பட்டிருக்கும்.உதாரணமாக சில குறிப்பிட்ட கட்டளைகளை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டியிருக்கும். குருகுலத்தில் இருந்து வெளிவரும் மாணவனே நாட்டிற்கு நல்லதொரு குடிமகனாகவும் வீட்டிற்குப் பயனுள்ளவனாகவும் இருந்தான் என்பது வரலாறு உணர்த்தும் உண்மை. கடந்த தலைமுறை வரைக்கும் கல்வி முறையில் சிறந்த ஒழுக்கம், அறிவு, மரபும் இருந்தது. ஒழுக்கம், அன்பு,பரிவு,அறிவு, கடமை ஆகியவற்றை உணர்ந்து கொள்ளும் இடமாக வகுப்பறைகள் இருந்தன. ஆனால் இன்றைக்கு வகுப்பரை வன்முறை களமாகமாறி உள்ளது. வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தாக்குவது பெண் ஆசிரியர்களிடம் அத்துமீறி நடப்பது, சக மாணவ தோழிகளிடம் தவறுதலாக நடந்து கொள்வது என்று வகுப்பறையின் சூழல் மாறிவிட்டது.

வகுப்பறையில் பாடம் நடத்தும்போது சகமாணவனுடன் பேசுவது, அரட்டை அடிப்பது, ஆசிரியர் வகுப்பறையில் இருக்கும்போது எழுந்து வெளியே செல்லுதல் ஆசிரியரை மதிக்காமல் நடப்பது போன்றவை இன்றைக்கு வகுப்பறையில் நடக்கும் சில உதாரணங்கள் மேற்கத்தியக் கல்விமுறையில் பயின்று வெளிவந்த எமது தமிழ்ப் பிள்ளைகளைப் பாருங்கள், அவர்களில் எத்தனை பேருக்கு கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு என்பன இருக்கிறது? இருந்தால் எவ்வளவு வீதம் இருக்கிறது என்று சோதித்துப் பாருங்கள் மேற்கத்தியக் கல்விமுறை நமக்கு தெரிந்துவிடும்.

மாணவன் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் பெரியோர்களை மரியாதை அளிக்காமல் நாவடக்கம் ஆரோக்கியமான போட்டி பண்பாக நடந்து கொள்ளுதல் போன்ற நன்னடத்தை இல்லாவிட்டால் அம்மாணவனால் நாட்டிற்கும், வீட்டிற்கும், அவன் சார்ந்த சமுகத்திற்கும், ஏன் உலகிற்கும் என்ன பயன்? இன்றைய காலக்கட்டத்தில் பள்ளிகளில் ஆசிரியர்கள் மாணவ,மாணவிகளின் தனித்திறமையை வெளிப்படுத்துவதற்கு மாறாக ஒழுங்கீன செயல்களில் ஈடுபடுகின்றனர். வகுப்பறைக்கு மது குடித்துவிட்டு செல்வது பள்ளி வளாகத்தில் புகைப்பிடிப்பது மேலும் வகுப்பறையில் உள்ள மாணவிகள், மாணவர்களை கிண்டல் செய்வது போன்றவை நடக்கிறது. வகுப்பறையில் மாணவர்களுக்கு நடக்கும் சிறு சிறு சண்டைகள் தற்போது கொலைவெறி தாக்குதலாக மாறி வருகிறது. கடந்த வருடத்தில் தமிழ்நாட்டில் ஒரு அரசு

பள்ளியில் 8ம் வகுப்பு படித்துவந்த மாணவனை மற்றொரு மாணவன் வகுப்பறையில் வைத்து கத்தியால் குத்தி கொலை செய்தான். இந்த மாணவன் அளித்த வாக்குமூலத்தில் ஓரினசேர்க்கை மறுத்ததால் கொலை செய்தான் என்று கூறினான். இந்த சம்பவம் மறைவதற்குள் மற்றொரு மாணவனை பள்ளியிலேயே கொலை செய்த சம்பவம் அரங்கேறியது.

இதே போன்று ஒரு அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் பிளஸ்2 வகுப்பறையில் மாணவன் ஒருவன் ஒரு குறிப்பிட்ட கட்சியின் கொடி மற்றும் பெயரை எழுதியதாக தெரிகிறது. இதை பார்த்து சக மாணவன் ஏன் இந்த கட்சியின் கொடி மற்றும் பெயரை எழுதுகிறாய் என கேட்டுள்ளார். கொடியை வரைந்த மாணவனுக்கு ஆதரவாக அவரது நண்பர்கள் நாங்கள் வரைவோம் இதை நீ ஏன் கேட்கிறாய் என கேட்டுள்ளார். இதனால் இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது இதை பார்த்த சக மாணவர்கள் அதிர்ச்சி அடைந்து வகுப்பறையில் இருந்து வெளியே ஓடினர். இச்சம்பவம் பள்ளி முழுவதும் தெரிந்ததால் பள்ளியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. உடனே தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பிரச்சனை செய்த மாணவர்களை அழைத்து சமாதானம் செய்து வைத்து எச்சரித்தனர். இதை தொடர்ந்து வகுப்புகள் நடைபெற்றது. இந்நிலையில் பள்ளி முடிந்ததும் மாணவர்கள் வீட்டிற்கு புறப்பட்டனர். பள்ளிக்கு வெளியே வகுப்பறையில் ஏற்பட்ட தகராறு தொடர்பாக இருதரப்பு மாணவர்களும் இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டது.

இவர்களுக்கு ஆதரவாக மாணவர்களின் நண்பர்கள் மற்றும் சிலர் ஒருவரையொருவர் சரமாரி தாக்கிக்கொண்டனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மாணவர்கள் உட்பட 25 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இது ஒருபுறம் இருக்க மாதா,பிதா,குரு, தெய்வம் என்று குறிப்பிடுகின்ற தாய், தந்தைக்கு பிறகு குருவிற்கு அதிக மரியாதை வழங்கப்படுகிறது.

ஆசிரியர்களுடன் மாணவர்கள் அதிக நேரம் செலவிடுகின்றனர். ஆனால் அவர்களையும் ஒருமையில் பேசுவது கேலி கிண்டல் செய்து போன்ற பல காரியங்களில் மாணவர்கள் ஈடுபடுகின்றனர். மாணவர்களை தண்டிக்கும் போது ஆசிரியர்கள் மீது கொலைமுயற்சி மற்றும் தாக்குதல் ஈடுபடுகின்றனர். கடந்த 2012ம் ஆண்டு 9ம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவன் பள்ளி ஆசிரியரை வகுப்பறையில் குத்தி கொலை செய்த சம்பவம் ஆசிரியர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில் சென்னையில் உள்ள பிரபல தனியார் பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியரை அதே பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவன் பள்ளி வளாகத்தில் விசில் அடித்ததால் உடற்கல்வி ஆசிரியர் மாணவனை



அடித்ததாக மாணவன் நடந்த சம்பவம் குறித்து தனது பெற்றோருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தான்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் 50க்கும் மேற்பட்ட தனது ஆதரவாளர்களுடன் பள்ளிக்குள் அதிரடியாக புகுந்து உடற்கல்வி ஆசிரியரை தாக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. கூட்டுக்குடும்பம் என்றால் தாத்தா பாட்டி முதல் சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை என உறவுகளுக்கு பஞ்சமிருக்காது. ஆனால் இன்றைய காலத்தில் உறவினர்கள் நடந்து சென்றால் கூட அவர்கள் யார் என்பது தெரிவதல்லை. எது நன்மை? எது தீமை? என்று தாத்தா, பாட்டி கதை சொல்வார்கள். அந்த கதையில் அன்பு, பாசம், மனிதநேயம், மற்றவர்களுக்கு உதவும் மனபான்மை சொல்லி வந்தார். ஆனால் தற்போது அந்த உறவுகள் எல்லாம் பாரமாக மாறி போனதால் பெற்ற பிள்ளைகள் பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் சேர்ந்து விடுகின்றனர். இதனால் இயந்திர உலகில் உள்ள வாழும் மனிதர்கள் பெற்ற பிள்ளைகளை கவனித்துக்கொள்வதும் இல்லை. இதனால் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கு இடையே பாசம் குறைந்து வருகின்றது.



–S.செந்தில்குமார்
(திரு.வி.க நகர்)

# ஏசி கார் பயன்படுத்துபவரா நீங்கள்? கட்டாயம் தெரிந்துகொள்ளுங்கள்...!




இன்றைய நவநாகரீக உலகில் பெரும்பாலானவர்கள் கார்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அதிலும், தற்போது சந்தைக்கு வரும் அனைத்து கார்களும் ஏசி வசதியுடனே உள்ளன. அந்த வகையில் ஏசி கார்களை பயன்படுத்துபவர்களில் நீங்களும் ஒருவர் என்றால் கண்டிப்பாக இந்த விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பொதுவாகவே அனைத்து கார்களுக்கும் அமைந்துள்ள டேஸ்போர்ட், இருக்கைகள் மற்றும் காருக்குள் உள்ள அனைத்தும் பெரும்பாலும் பிளாஸ்டிக்கினால் ஆனவை. இந்த பாகங்கள் பென்சீன் எனப்படும் கேன்சரை உருவாக்கும் நஞ்சை உமிழ்கின்றன.

சாதாரணமாக மனித உடல் ஏற்றுக்கொள்ளும் பென்சீனின் அளவு சதுர அடிக்கு 50 மில்லி கிராம். ஆனால், வீடுகளில் நிழலில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் காருக்குள் சதுர அடிக்கு 400 முதல் 800 மில்லி கிராம் என்ற அளவில் பென்சீன் இருக்கும். அதே சமயம் வெயிலில் நிறுத்திவைக்க பட்டிருக்கும் காருக்குள் பென்சீனின் அளவு சதுர அடிக்கு 4000 மில்லி கிராம் வரையில் இருக்கும். இது மனித உடல் ஏற்றுக்கொள்ளும் அளவை விட 40 மடங்கு அதிகம். அதிலும் ஏசி காரை பயன்படுத்தும் போது, ஜன்னலை மூடுவதால் காருக்குள் இருக்கம் பென்சீன் வெளியேற முடியாமல் அப்படியே இருக்கும். அதனை சுவாசிக்கும் போது, உடலுக்குள் செல்லும் பென்சீனால் கேன்சர், சிறுநீரக பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு போன்றவை ஏற்படும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனால், எப்போதும் காருக்குள் நுழைந்தவுடன் ஏசியை இயக்கி ஜன்னலை மூடக்கூடாது என அறிவுறுத்தப்படுகிறது. மேலும் ஒரு சில நிமிடங்ளுக்கு ஜன்னலை திறந்து வைத்துவிட்டு அதன் பின்னர் தான் ஏசி–யை இயக்கவேண்டும் என்றும் அறிவியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

–ஊர்க் குருவி

# கேன் வாட்டர் அருந்துபவர்களா...?

## –ஒரு திடுக்கிடும் தகவல்



**வீ**டுகளுக்கு வரும் கேன்வாட்டர்களில் 60 சதவீதம் தண்ணீர் தரமற்றதாக உள்ளது. இது போன்றதரமற்ற தண்ணீரைக் குடித்தால், நிமோனியா தொற்று ஏற்பட்டு நுரையீரல் பாதிக்கும் அபாயம் உள்ளதாக டாக்டர்கள் எச்சரித்துள்ளனர். கோடை காலம் தொடங்கி விட்டால் தண்ணீர் தாகமும் அதிகரிக்கும். தாகம் ஏற்படும்போது கிடைக்கும் தண்ணீரை குடிப்பது, கடைகளில் குளிர்பானம், மோர் என்று இதமாக சாப்பிடும் பழக்கம் பலருக்கு உள்ளது. சாலை ஓரங்களில் சுகாதாரமற்ற முறையில்விற்பனை செய்யப்படும் குளிர்பானம், மோர் வாங்கி குடிப்பதால் வெயில் காலங்களில் பலருக்கு தொண்டையில் கரகரப்பு. இருமல் சளி ஏற்பட்டு கஷ்டப்படுகிறார்கள். வெயில் காலங்களில் ஏற்படும் இது போன்ற தொண்டை பிரச்சனைகளை தடுப்பது குறித்து டாக்டர்கள் கூறுகையில் தமிழகம் முழுவதும் குறிப்பாக 20 லிட்டர் கொண்ட வாட்டர் கேன்களை பயன்படுத்துகிறார்கள். கேன்களில் குடிநீர் வாங்கினால் அது சுகாதாரமாகத்தான் இருக்கும் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அது முற்றிலும் தவறு. உதாரணத்துக்கு, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருந்துதான் வாட்டர் கேன் சப்ளையாகிறது. இதில் ஒரு சில கம்பெனிகளை தவிர பல கம்பெனிகளில் ஐ.எஸ்.ஐ முத்திரை குத்திய லேபிள் இருக்குமே தவிர, உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ள தரத்துடன் தண்ணீர் சப்ளை செய்யப்படுவதில்லை. உண்மையில் 100 சதவீத வாட்டர் கேன்களில் 60 சதவீதம் தண்ணீர் தரமற்றதாக உள்ளது. இதுபோன்ற தரமற்ற வாட்டர் கேன் தண்ணீரை தொடர்ந்து குடித்து வருவதால் நமது உடம்பும் குறிப்பிட்ட தண்ணீரை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்துக்கு மாறிவிடும். ஆனால் திடீரென கோடை வெயிலில் சுற்றி விட்டு ஏதாவது ஒரு இடத்தில் அல்லது உறவினர் நண்பர்கள் வீடுகளில்போர் மற்றும் கிணற்று தண்ணீரால் தயாரிக்கப்பட்ட குளிர்பானங்கள் மோர், ஐஸ்கிரீம் சாப்பிடும்போது தொண்டையில் அலர்ஜி ஏற்படுகிறது. இதனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கரகரப்பு, சளி, காய்ச்சல் போன்றநோயால் பாதிக்கிறார்கள். இது நிமோனியா தொற்றாக மாறி நுரையீரல் தொற்று காரணமாக ஏற்படும். நிமோனியா எந்த மருந்துக்கும் கட்டுப்படாத கிருமியாக உருவாகி உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

மேலும் கடந்த சில மாதங்களாக இந்தியாவில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இறந்தவர்களில் அதிகமானோர் சுவாச மண்டல தொற்று நோய் காரணமாக இறந்துள்ளது தெரியவந்துள்ளது. நுரையீரலைப் பாதிக்கும் நிமோனியாவில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள குளிர் மற்றும் கோடை காலம் என எந்த சீசனிலும் குடிதண்ணீரை காய்ச்சி குடிப்பதை பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். தொண்டை கரகரப்பு பிரச்சனையால் பாதிக்கப்படுபவர்கள் காது, மூக்கு, தொண்டை (இஎன்டி) டாக்டரிடம் பரிசோதனை செய்து கொள்வது அவசியம் என கூறியுள்ளனர். எனவே கேன் தண்ணீரை வாங்கும்போது அது தரமானதா என்பதை பார்த்து கவனித்து வாங்க வேண்டியது அவசியம்.

– மகேஷ்

ஒரு குறிப்பிட்ட பொருளை வாங்க பல கடைகளுக்கு ஏறி இறங்குவது அப்படி ஏறி இறங்கினாலும் அலுத்துக் கொள்ளாமல் ஒரு முறைக்கு பல முறை விலை விசாரித்து சரியான பொருளை சரியான விலைக்கு வாங்குவதே 100 சதவீதம் நிறைவான ஷாப்பிங்கின் சிறப்பு அம்சம் இந்த பொறுமை பெண்களிடம் நிறையவே இருக்கிறது என்கிறது ஓர் ஆய்வு.

**எளிதாக, பாதுகாப்பாக ஷாப்பிங் முடிக்க சில டிப்ஸ்கள்:** ஷாப்பிங் செல்வதற்கு முன்னர் நீங்கள் வாங்க வேண்டிய அல்லது வாங்க விரும்பும் பொருள்களை பட்டியல் போட்டு எடுத்துச் செல்லுங்கள். இது இல்லாதபோதும் அப்செட்டாக இருக்கும் போதும் ஷாப்பிங் சென்றால் சரியாக பொருட்களை தேர்வு செய்யமுடியாது. ஷாப்பிங் சென்றால் கண்களில் பட்டதையெல்லாம் வாங்கி குவிக்காமல் ஒவ்வொரு பொருளையும் தேர்வுசெய்யும் போதும் இது நமக்கு தேவையானது தானா மிகவும் அவசியமானதா என்ற கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

ஷாப்பிங் செல்லும்போது தனியாக செல்லுங்கள் சிலர் நண்பர்களுடன் ஷாப்பிங் சென்றால் அவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப தேர்வு செய்வார்கள் சில நேரங்களில் நமக்கு பிடிக்காவிட்டாலும் விலை அதிகமாக இருந்தாலும் நண்பர்கள் நன்றாக

# பாதுகாப்பான ஷாப்பிங்



நேரத்தை குறைக்க உதவும். பட்ஜெட் போடுவதும் சிறந்த ஷாப்பிங்கிற்கு தேவையானவற்றுள் மிக முக்கியமானதாகும். இதன் மூலம் பணம் வீணாவது தவிர்க்கப்படும் கண்ணில் பார்த்தவற்றை எல்லாம் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தையும் தவிர்த்து தேவையானவற்றை வாங்கி பணத்தை மிச்சப்படுத்தலாம். மக்கள் கூட்டம் அதிகம் இல்லாத நேரங்களை ஷாப்பிங்குக்காக தேர்ந்தெடுங்கள் நீங்கள் சரியான மூடில் இருக்கிறது என்று கட்டாயப் படுத்துவார்கள். கடைகளில் இருக்கும் விற்பனை பிரதிநிதிகள் பொருட்களை விற்பதற்காக மட்டுமே உள்ளார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. சிரித்து பேசுகிறார்கள் நண்பர்களை போல் பழகுகிறார்கள் என்ற காரணத்திற்காக பொருட்களை வாங்கவேண்டும் என்று விரும்பாதீர்கள் அவர்களது கடமை பொருட்களை விற்பனை செய்வது தான் எனவே அவர்கள் உங்களிடம்



சொன்னாலும் உங்களுக்கு தேவையானதா என்பதை மட்டும் கருத்தில்கொண்டு அதனை வாங்கும் திடத்தோடு இருங்கள்.

கடைக்கு சென்றவுடன் இதை வாங்கிக் கொள்ளலாம் அதை வாங்கிக் கொள்ளலாம் என நினைக்காதீர்கள் நீங்கள் பட்டியலிட்டு வந்த பொருட்களை மட்டும் வாங்குங்கள் உங்கள் பட்டியலில் உள்ள பொருள் எங்கு கிடைக்குமோ அந்த கடைக்கு மட்டும் செல்லுங்கள் ஒரு துணி வாங்கும் பணத்தில் இரண்டு துணிகள் மூன்று துணிகள் நான்கு துணிகள் என்று ஆசை காட்டினால் மயங்கி விடாதீர்கள் தேவைக்கேற்றதை மட்டும் வாங்குங்கள் தரமான பொருள் மெருகுடன் இருக்கும் பொருட்களை மட்டுமே வாங்குங்கள்

**கார்டு உரசுறீங்களா? உஷாரா இருங்க.**

டெபிட் கார்டாக இருக்கட்டும் கிரெடிட் கார்டாக இருக்கட்டும் எங்கு போனாலும் ஷாப்பிங்குக்கு ஓட்டலுக்கு பில் பணம் செலுத்தி கார்டுகளை பயன்படுத்துவதில் முழு உஷார் தேவை கடந்த வாரம் தகவல் திருட்டு நடந்ததாக சந்தேகிக்கப்படும் 32 லட்சம் டெபிட் கார்டுகள் முடக்கப்பட்டன இது தொடர்பான விசாரணை நடந்து வருகிறது. எனவே ஹேக்கர்களிடம் இருந்து உங்கள் பணத்தை பாதுகாக்க பாஸ்வேர்டை அடிக்கடி மாற்றுங்கள். சில கடைகளில் கார்டை ஒன்றுக்கு இரண்டு முறை மிஷினில் தேய்ப்பர் அப்படி செய்யும் போது ஒரு முறைக்கு இரு முறை சில சமயம் பணம் எடுக்கப்பட்டு விடவும் வாய்ப்புகள் உள்ளன. பின்னர் கூடுதலாக எடுக்கப்பட்ட பணம் வங்கிக்கணக்கில் திரும்பவும் வந்துவிடும் என்றாலும் உஷாராக இருப்பது நல்லது மொபைல் போனில் பரிவர்த்தனை விவரங்கள் வருகிறதா என்று பார்த்து கவனமாக இருக்கவும்.

கார்டை பயன்படுத்தினால் அதில் இருந்து பணம் திருடும் ஆன்லைன் கும்பல் சர்வதேச அளவில் சுறுசுறுப்பாக உள்ளது. நம் கார்டு நம்பரை கண்டுப்பிடித்து பணத்தை வழித்து எடுத்து விடுவர் அதனால் முடிந்தவரை கார்டை பயன்படுத்துவதில் உஷார் தேவை.


# புகார் அளியுங்கள்!

**ஒருவேளை நீங்கள் எடுத்துச் செல்லும் உணவுப் பொருளில் கலப்படம் இருப்பது ஆய்வகச் சோதனையில் உறுதி செய்யப்பட்டால், ஆய்வுக்காக நீங்கள் செலுத்திய கட்டணம் உங்களுக்கே, திருப்பி அளிக்கப்படும்!**

**இந்த அமைப்பின் இணையதள முகவரி:**

**http://www.fassai.gov.in./home**

# உணவு தரம் பற்றிய புகார்களுக்கு

**SMS or Whatsapp**

**94440 42322**

**Email: unavupukar@gmil.com**

**ஆணையாளர்**

**உணவு பாதுகாப்புத்துறை**



# அழிவின் விளிம்பில் தென்னிந்தியாவின் முதல் இரயில் நிலையம்...

காலவெள்ளத்தில் எவ்வளவு பெரிய விஷயங்களும் காணாமல் போயிவட வாய்ப்பு இருக்கிறது என்பதற்கான நிகழ்கால சாட்சியமாக நின்று கொண்டிருக்கிறது ராயபுரம் ரயில் நிலையம் இந்த ரயில் நிலையத்தின் கதை மிக மிக சுவாரஸ்யமானது. ஆனால் இந்த பகுதியைச் சேர்ந்த பலருக்கே கூட இன்று அது தெரியவில்லை என்பதுதான் உச்சகட்ட சோகம்.

தென்னிந்தியாவின் முதல் ரயில் நிலையம் ராயபுரம்தான் இங்கிருந்துதான் தென்னிந்தியாவின் முதல் ரயில் தனது பயணத்தைத் தொடங்கியது ஸ்டீபன்சன் நீராவி என்ஜினை கண்டுபிடித்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு தென்னிந்தியாவில் ரயில்களை இயக்குவது குறித்து லண்டனில் விவாதிக்கப்பட்டது. இதனையடுத்து 1845 ஆம் ஆண்டு மெட்ராஸ் ரயில்வே கம்பெனி தொடங்கப்பட்டது. ஆனால் அவர்கள் திட்டமிட்டு வேலையைத் தொடங்குவதற்கு முன்னர் 1849 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தி கிரேட் இந்தியா பெனின்சூலா கம்பெனி இந்தியாவின் முதல் இருப்புப் பாதையை அமைத்துவிட்டது. 21 மைல் நீளத்திற்கு அமைக்கப்பட்ட இந்த இருப்புப் பாதையில் பம்பாயின் போரி பந்தரில் இருந்து தானே வரை இந்தியாவின் முதல் ரயில் 1853 ஏப்ரல் 16 ம் தேதி இயக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் இருப்புப் பாதை அமைக்கும் பணியை மெட்ராஸ் ரயில்வே கம்பெனி தொடங்கியது. அதற்காக அது தேர்ந்தெடுத்த இடம்தான் ராயபுரம் கிழக்கிந்திய கம்பெனிக்காரர்கள் வசித்து வந்த புனித ஜார்ஜ் கோட்டைக்கு மிக அருகில் இருந்ததால் இந்த இடம் தேர்வு செய்யப்பட்டது. பணிகள் விறுவிறுப்பாக மேற்கொள்ளப்பட்டு விசாலமான அறைகள் உயரமான தூண்கள் அழகான முகப்பு என பிரம்மாண்டமான ராயபுரம் ரயில் நிலையம் கட்டி முடிக்கப்பட்டது.

அப்போதைய மெட்ராஸ் ஆளுநர் ஹாரிஸ் பிரபு 1856 ஜூன் 28 ம் தேதி இதனைத் திறந்துவைத்தார் இதனை அடுத்து ஜூலை 1 ந் தேதி தென்னிந்தியாவின் முதல் இரயில் இங்கிருந்து புறப்பட்டது. ஆற்காடு நவாப்பின் தலைமை இடமாக இருந்த ஆற்காடு வரை இந்த ரயில் இயக்கப்பட்டது. இதற்கான ரயில் பெட்டிகளை அக்காலத்தில் புகழ்பெற்ற சிம்சன் கம்பெனி தயாரித்திருந்தது ஆளுநர் ஹாரிசும் சுமார் 300 ஐரோப்பியர்களும் இந்த முதல் ரயிலில் பயணப்பட்டனர் ஆம்பூர் சென்றடைந்த ரயிலுக்கு துப்பாக்கி குண்டுகளும் பேண்டு வாத்தியங்களும் முழுங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த ரயில் புறப்பட்ட சிறிது நேரத்தில் மற்றொரு ரயில் ராயபுரத்தில் இருந்து திருவள்ளூர் வரை இயக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி பற்றி லண்டன் பத்திரிகையான விரிவாக செய்தி வெளியிட்டிருந்தது வழிநெடுகிலும் இந்த ரயில்களை ஏராளமானோர் அச்சம் கலந்த ஆச்சர்யத்தோடு பார்த்ததாக அந்த செய்தி தெரிவிக்கிறது வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களும் மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்களும் ஒரு மிகப் பெரிய இரும்பு வாகனம் தங்களை நோக்கி விரைந்து வருவதைப் பார்த்து மிரண்டு ஓடினார்களாம் சில இடங்களில்



மக்கள்விழிகள் விரிய பலத்த ஆரவாரத்தோடு இந்த ரயிலை ரசித்துகூட பார்த்திருக்கிறார்கள் இப்படி அன்றைய மெட்ராஸ்வாசிகளுக்கு மறக்க முடியாத ஒரு அனுபவத்தை கொடுத்த ராயபுரத்தில் இருந்து புறப்பட்ட முதல் இரண்டு ரயில்கள்.

முதல் ரயில் ஆம்பூர் சென்றடைந்ததும் அங்கு ஒரு சிறிய விழா நடத்தப்பட்டிருக்கிறது. அதில் பேசிய ஆளுநர் ஹாரிஸ் பிரபு மெட்ராஸ் ரயில்வே கம்பெனியையும் , அதன் மேலாளர் ஜென்கின்சையும் வெகுவாகப் பாராட்டி இருக்கிறார் ஒரு மைல் இருப்புப் பாதை அமைக்க 5,500 பவுண்டுகள் செலவானதாகவும் அது ஒரு நல்ல முதலீடுதான் என்றும் அவர் அப்போது குறிப்பிட்டிருக்கிறார். இப்படி கோலாகலமாக தொடங்கப்பட்ட ராயபுரம் ரயில் நிலையம் அடுத்த 17 ஆண்டுகளுக்கு மெட்ராஸ் மாநகரின் ஒரே ரயில் நிலையமாக கோலோச்சியது. 1873 இல் இதற்கு போட்டிக்கு வந்தது மெட்ராஸ் சென்ட்ரல் ரயில் நிலையம் பின்னர் வடக்கு நோக்கி செல்லும் ரயில்கள் சென்ட்ரலில் இருந்தும் தெற்கு நோக்கி செல்லும் ரயில்கள் ராயபுரத்தில் இருந்தும் புறப்பட்டுச் செல்லும் என சொத்து பிளீக்கப்பட்டது. இதனிடையே சென்னை துறைமுகம் வேகமாக வளர்ச்சி அடைந்ததால் துறைமுகத்தின் சரக்குப் போக்குவரத்தும் ராயபுரம் ரயில்நிலையம் மூலம் நடைபெற தொடங்கியது. இதன் விளைவு புதிதாக முளைத்தது எழும்பூர் ரயில் நிலையம் பின்னல் தெற்கு நோக்கி செல்லும் ரயில்கள் எழும்பூருக்கு இடம் பெயர்ந்தன. ராயபுரம் ரயில் நிலையம் மெல்ல தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது சுமார் 70 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ரயில் நிலையம் இன்று புதர்களாக மண்டி பொட்டல்வெளி போல காட்சியளிக்கிறது.

சென்னை கடற்கரை மார்க்கத்தில் இயக்கப்படும் வெகு சில ரயில்கள் மட்டுமே இங்கு நின்று செல்கின்றன. அப்படி ஒரு ரயிலில் அமர்ந்து கொண்டு ஜன்னல் வழியாக பொலிவிழந்து கிடக்கும் இந்த ரயில் நிலையத்தைப் பார்க்கும் போது நம்மையும் அறியாமல் கண்கள் பனிக்கின்றன. இந்தியாவில் ஹவுரா ரயில் நிலையத்திற்கு அடுத்தபடியாக அதிக இடவசதி இருக்கும் ஒரே ரயில் நிலையம் ராயபுரம்தான்.இந்த ரயில் நிலையம் கடந்த 2005 ஆம் ஆண்டு புணரமைக்கப்பட்டது. நினைவுசின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே பொது ஜனங்களின் கருத்து.

# உதட்டுக்கு அழகு உடலுக்கு கேன்சர்..!




மார்பகப் புற்றுநோய் பற்றி பலருக்கு இப்போது தெரிந்திருக்கிறது. வரும் முன்னர் தடுக்க வேண்டும் என்பதிலும் வந்துவிட்டால் தாமதிக்காமல் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் நினைக்கிறார்கள் இந்த விழிப்புணர்வின் அடுத்தகட்டாமாக நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயத்தை இப்போது மருத்துவ உலகம் முன்வைத்திருக்கிறது. அது லிப்ஸ்டிக். லிப்ஸ்டிக்கில் புற்றுநோயை உண்டாக்கக் கூடிய காரீயம் ( Lead) உள்பட பல ஆபத்தான ரசாயனங்கள் இருக்கிறது என்பது நீண்ட நாட்களாகவே கூறப்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்போது லெட்டை போலவே ஆபத்தான வேறு முக்கிய விஷயமும் இருக்கிறது என்று சமீபத்தில் பரபரப்பை ஏற்பத்தி இருக்கிறார் இந்திய மருத்துவ ஆய்வாளரர்கள்.

எண்ணயெ் மெழுகு கொழுப்பு இவற்றை அடிப்படையாக வைத்துத்தான் லிப்ஸ்டிக்கை தயாரிக்கிறார்கள். இதில் நிறத்துக்காக சில வேதிப்பொருள்களைச் சேர்ப்பார்கள் மூலப்பொருட்களாக சேர்க்கப்படுவதில் லெட் காட்மியம், குரோமியம், மாங்கனீசு, அலுமினியம் போன்ற ஹெவி மெட்டல்கள் கலந்திருக்கும். நிறத்துக்காக சேர்க்கப்படும் வேதிப்பொருட்களிலும் இந்த ஹெவி மெட்டல்கள் இருக்கும். ஆனால் லிப்ஸ்டிக்கில் என்னென்ன கலந்து தயாரிக்கப்பட்டிருக்கிறது என்ற Ingredients பகுதியில் ஹெவி மெட்டல்களை பற்றி குறிப்பிட மாட்டார்கள் ஹெவிமெட்டல்கள் நேரடியாகக் கலக்கப்படாததால் Base materials, Pigments என்றுதான் அச்சிட்டிருப்பார்கள். லிப்ஸ்டிக் தயாரிப்பாளர்கள் இந்த விவரங்களை மறைத்தாலும் பல நாடுகளின் ஆய்வுகளில் இந்த ஹெவி மெட்டல்கள் கலக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக லெட் இருப்பது அமெரிக்கா கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வுகளில் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. லிப்ஸ்டிக்கால் வரக்கூடிய பிரச்சனைகளைப் பட்டியல் இடுவோர். பொதுவாக லிப்ஸ்டிக்கால் சரும அலர்ஜி வரலாம்.



உதட்டில் வெடிப்பு ஏற்படுவது உதடு முழுவதும் கருப்பாவது மச்சம் போல் திட்டுத்திட்டாக சில இடங்களில் மட்டும் கருப்பாவது போன்ற சின்னச்சின்ன பிரச்சனைகள் வரலாம் நிறத்துக்காக சேர்க்கப்படும் வேதிப்பொருட்களால் Allergic contact dermatitis என்ற சரும அலர்ஜி வரலாம் சில நேரங்களில் லிப்ஸ்டிக்கின் நிறமிகளால் உதட்டின் சருமம்




உறியலாம் குறிப்பாக வெயிலில் செல்லும்போது புற ஊதாக் கதிர்களினால் உதட்டின் சருமம் உறியும் நிலை ஏற்படும். இவற்றைத் தவிர்த்து லிப்ஸ்டிக்கை விழுங்குவதற்கான வாய்ப்பு நிறைய இருக்கிறது. முக்கியமாக தண்ணீர் குடிக்கும்போதோ சாப்பிடும்போதோ லிப்ஸ்டிக்கை விழுங்கிவிடுவார்கள் சருமத்தில் உன்ன தடவினாலும் அது உடலால் உறிஞ்சப்பட்டு ரத்தத்தில் கலக்கும் அதேபோல லிப்ஸ்டிக்கும் உதட்டிலிருந்து ரத்தத்தில் கலக்கும் வாய்ப்பு அதிகமாக உண்டு.

மிகக் குறைந்த அளவில் லெட் கலந்திருப்பதால் லிப்ஸ்டிக்கை பயன்படுத்தலாம் என்று மருந்து மற்றும் உணவுத்தரக்கட்டுப்பாடு நிறுவனமான எஃப்.டி.ஏ அனுமதித்திருக்கிறது. ஆனாலும் ரெட்டுக்கு என்று சில ஆபத்தான குணங்கள் இருக்கின்றன. Neuro toxins என்ற நரம்பு மண்டலங்களை பாதிக்கக் கூடிய அபாயம் சிறுநீரகம், கல்வீரல் பாதிப்பு புற்றுநோய் போன்றவற்றை லெட் ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது மாடல்கள் சினிமா துறையைச் சேர்ந்தவர்கள் விசேஷ நாட்களில் லிப்ஸ்டிக்கை பயன்படுத்துகிற பெண்களுக்கு உங்கள் ஆலோசனை என்ன?



லிப்ஸ்டிக்கை ஒருநாளிலேயே அதிக முறை பயன்படுத்துவதும் அதிக அளவிலான லிப்ஸ்டிக்கை பயன்படுத்துவதும் தவறானது மிகவும் இளம்வயதிலேயே லிப்ஸ்டிக் பயன்படுத்த ஆரம்பிப்பதும் பெரிய தவறு 15 வயதில் ஒரு பெண் லிப்ஸ்டிக்கை பயன்படுத்த ஆரம்பிப்பதும் 45 வயதாகும்போது ஏறக்குறைய 30 ஆண்டுகள் அந்தப் பெண் லிப்ஸ்டிக்கை பயன்படுத்தி இருப்பார்.





இதனால் லிப்ஸ்டிக்கினால் உண்டாகும் அபாயம் கொஞ்சம் கொஞ்சமாக சேர்ந்து பெரிய அளவில் அவரை பாதிக்கும் அதனால் மிகவும் இளவயதிலேயே பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் முக்கியமாக அழகுபடுத்துகிறேன் என்ற பெயரில் குழந்தைகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் லிப்ஸ்டிக் போட்டுவிடக் கூடாது. மாடலிங், சினிமா போன்ற துறையில் லிப்ஸ்டிக் பயன்படுத்தி உதட்டின் நிறம் மாறினாலோ கருப்பு மார்க் வருகிறது என்றால் அந்த லிப்ஸ்டிக் பயன்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும் மருத்துவ ஆலோசனையும் அவசியம். பெண்களின் மார்பகப் புற்றுநோயைத் தூண்டும் அபாயம் லிப்ஸ்டிக்கில் இருக்கிறது பெண்களின் ஈஸ்ட்ரோஜென், ஹார்மோனை தூண்டக்கூடிய வேதிப்பொருள் லிப்ஸ்டிக்கில் இருக்கிறது. அதாவது லிப்ஸ்டிக்கில் இருக்கும் வேதிப்பொருள் ஈஸ்ட்ரோஜென் ஹார்மோன் போல பெண்களின் உடலில் செயல்படும்







இதனால் மார்பின் அளவு இயல்பாகப் பெரிதாவது போலத்தோன்றி பின்னர் மார்பகப் புற்றுநோய் உண்டாகும் இந்த உண்மையை ஐரோப்பிய நாடுகளில் லிப்ஸ்டிக் பயன்படுத்துகிற பெண்களிடம் எடுக்கப்பட்ட ஆய்வில் கண்டுபிடித்திருக்கிறார்கள். மேல்தட்டு பெண்களிடம் காணப்பட்ட இந்த லிப்ஸ்டிக் பழக்கம் இப்போது இந்தியாவில் எல்லா தரப்பிலும் பரவலாகிக் கொண்டிருக்கிறது. விழா நாட்கள் விசேஷங்களுக்கப் பயன்படுத்துவது என்று பெண்களிடம் ஆரம்பிக்கும் இந்த பழக்கம் சிலருக்கு தினசரி பழக்கமாகவும் ஆகிக்கொண்டிருக்கிறது. அதனால் இப்போதே லிப்ஸ்டிக்கினால் உண்டாகும் ஆபத்து பற்றிய எச்சரிக்கையை பெண்களிடம் உருவாக்க வேண்டியது அவசியம்.

ஈஸ்ட்ரோஜென் ஹார்மோன் அடிப்படையில் பெண்களுக்குப் பல நன்மைகளைத் தரக் கூடியது. பருவமடையச் செய்வது தன்மையுடன் இருப்பதற்குக் காரணமே ஈஸ்ட்ரோஜென்தான் பெண்களின் பாலியல் உறவின் விருப்பத்தைத் தூண்டுவதும் ஈஸ்ட்ரோஜென் ஹார்மோன்தான். அழகு சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் மார்பகங்களை பெரிதாக்க ஈஸ்ட்ரோஜென் ஹார்மோன்களை ஊசிகளாகவும் மாத்திரைகளாகவும் பயன்படுத்துவது உண்டு ஆனால் அது மருத்துவ ஆலோசனையுடன் அளவறிந்து கொடுக்கப்படுவதால் பிரச்சனைகள் வராது. அதுவே லிப்ஸ்டிக் போன்ற காஸ்மெட்டிக் பொருட்கள் மூலம் மறைமுகமாகத் தூண்டப்படும்போதோ மார்பகப் புற்றுநோய் பிரச்சனை வருவதாற்கான சாத்தியங்கள் நிறைய உண்டு. இதற்குக் காரணம் ஈஸ்ட்ரோஜென் ஹார்மோனை கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் மார்பகங்களின் செல்களுக்கும் கருப்பை செல்களுக்கும் அதிகமாக உண்டு என்பதுதான் அதனால்தான் ஈஸ்டிரோஜென் அதிகளவில் பெண்களின் உடலில் சுரக்கும்போது மார்பகப் புற்று நோயும் கருப்பைப் புற்றுநோயும் எளிதாக உருவாகிவிடுகிறது. மன அழுத்தம் வாழ்வியல் முறை உணவுப் பழக்கங்கள் என்று ஏற்கெனவே மார்பகப் புற்றுநோய்கான அபாயம் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் நீரிழிவுப் பிரச்சனையும் மார்பகப் புற்றுநோயை மறைமுகமாகத் தூண்டக்கூடியதாக இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே பெண்கள் கவனமாக இன்னும் எச்சரிகையாக இருக்க வேண்டியது அவசியம். மார்பகப் புற்றுநோய் பற்றி முன்பு பேசவே பெண்கள் தயங்குவார்கள் ஆனால் இப்போது வெளிப்படையாகப் பேசுகிறார்கள் என்பது வரவேற்க வேண்டிய



விஷயம் ஆனால் என்னதான் விழிப்புணர்வு ஏற்பட்டிருந்தாலும் உரிய நேரத்தில் பரிசோனை செய்துகொள்கிறவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. ஆரம்ப கட்டத்திலேயே வந்து சிகிச்சை எடுத்துக் கொள்கிறவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவுதான் முன்பைவிட மார்பகப் புற்றுநோய் விகிதம் அதிகமாகிக் கொண்டிருக்கும் நிலையில் பெண்களின் இந்த அலட்சியம் கவலைக்குரியதாக இருக்கிறது. அதிலும் வாழ்வில் முறை தவறான உணவுப்பழக்கம் உடல் பருமன் போன்ற காரணங்களால் இன்று மார்பகப் புற்றுநோய் ஏற்படுவது அதிகரித்திருக்கிறது.

லிப்ஸ்டிக்கில் மார்பகப் புற்றுநோய் ஏற்படுகிறது என்பது பற்றி உறுதியாகத் தெரியவில்லை ஆனால் ரசாயணம் எப்படியிருந்தாலும் ஆபத்துதான் என்பதன் அடிப்படையில் பெண்கள் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். லிப்ஸ்டிக்கில் இருக்கும் வேதிப்பொருள் ஈஸ்ட்ரோஜென் ஹார்மோன் போல பெண்களின் உடலில் செயல்படும். இதனால் மார்பின் அளவு இயல்பாகப் பெரிதாவது போலத் தோன்றி பின்னர் மார்பகப் புற்றுநோய் உண்டாகும்.லெட் கலந்த லிப்ஸ்டிக்கை கண்டுபிடிக்க

லிப்ஸ்டிக் விற்பனையில் பிரபலமாக இருக்கும் 12 முன்னணி பிராண்டுகளிலேயே லெட் கலப்படம் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. தரமானவை என்று மக்களால் நம்பப்படுகிற முன்னணி பிராண்டுகளிலேயே பிரச்சனை என்றால் எந்த தர நிர்ணயமும் இல்லாமல் சந்தையில் விற்பனையாகிவரும் லோக்கல்



பிராண்டுகள் எப்படி இருக்கும் என்பதை யோசித்துக் கொள்ளலாம். இந்தியா உட்பட அமெரிக்கா இங்கிலாந்து சீனா, சிங்கப்பூர், மலேசியா, ஹாங்காங் போன்ற நாடுகளிலும் இதுதான் நிலைமை லிப்ஸ்டிக்கில் கலந்திருக்கும் லெட்டை எளிமையாகக் கண்டுபிடிக்க இரண்டு எளிய ஆலோசனைகளை நிபுணர்கள் சொல்கிறார்கள் அதிக நேரம் நிறம் தாங்கக் கூடிய லிப்ஸ்டிக் என்றால் அது அபாயமானது ஏனெனில் லெட் மற்றும் பிக்மெண்ட் அதிக அளவில் கலக்கப்பட்டிருந்தால் மட்டும்தான் நிறம் அதிக நேரம் தாங்கும் அதேபோல லெட்டை கண்டுபிடிக்க இன்னொரு சின்ன உத்தியும் இருக்கிறது.

கையில் சின்னதாக லிப்ஸ்டிக்கை தடவிக் கொள்ளுங்கள் அந்த லிப்ஸ்டிக்கின் மீது மோதிரம், செயின் என்று தங்கத்தை லேசாக உரசிப் பாருங்கள் உடனடியாக கையில் தடவப்பட்டிருந்த லிப்ஸ்டிக்கின் நிறம் கருப்பாக மாறினால் லெட் அதிகளவில் கலக்கப்பட்டிருக்கிறது என்று அர்த்தம். லிப்ஸ்டிக்கில் கலக்கப்படும் ரெட்டுக்கு நியூரோ டாக்சின்ஸ் என்ற நரம்பு மண்டலங்களைப் பாதிக்க கூடிய அபாயம் கொண்டதையும் சிறுநீரகம், கல்லீரல் பாதிப்பு, புற்றுநோய் போன்றவற்றை ஏற்படுத்தும் என்பதையும் மறுக்க முடியாது.

இது விரைவு யுகம்.எங்கும்,எதிலும் வேகம் என்றாகிவிட்டது. சீக்கிரமே பலன் தரும் பயிர்களை சாகுபடி செய்ய ஆசைப்படுகிறார்கள் விவசாயிகள்.பிரசவ தேதிக்கு முன்பே நாள் நட்சத்திரம் பார்த்து குழந்தையை 'ஆபரேஷன்' செய்து எடுக்க சொல்கிறார்கள் சில தாய்மார்கள். வாகனங்களில் வேகம்,வாழ்க்கையில் வேகம் என்று புதை குழிகளுக்குள் கால் பதித்துவரும் மனிதர்கள்,இப்போது விரைவு உணவு(' பாஸ்ட் புட்') என்ற படுகுழிக்குள் அதிகம் விழு

இளைஞர்கள் கூட்டம்தான் மொய்க்கிறது. இது போதாது என்று வீட்டில் இருக்கும் பெண்களும்,குழந்தைகளும் விரைவு உணவை விரும்பத் தொடங்கிவிட்டனர்.அதிலும் சில குழந்தைகள் விரைவு உணவு கேட்டு அடம்பிடிக்கின்றன.

அப்பா–அம்மாவும் தட்ட முடியாமல் வாங்கிக் கொடுக்கிறார்கள்.ஆசைக்கு அவசரத்துக்கு என்றாவது ஒரு நாள் சாப்பிட்டால் பரவாயில்லை.அடிக்கடி அந்தப் பழக்கத்திற்கு ஆட்பட்டால் ஆபத்தை நாமே காசு பணம் செலவழித்து விலைக்கு வாங்குவதாக அர்த்தம்.

# விஷமாகும் (பாஸ்ட் புட்) விரைவு உணவுகளுக்கு தடை வருமா...?



கிறார்கள்.இது ஆபத்து மட்டுமல்ல...விபரீதமான ஆபத்து. அடிக்கடி விரைவு உணவு சாப்பிட்டால் உங்களை நீங்களே ஆபத்தில் தள்ளுகிறீர்கள் என்று அர்த்தம்.நகரங் களில் நாலு தெருவுக்கு ஒரு விரைவு உணவகம் வந்தாகிவிட்டது.அதோடு கிராமங்களுக்கும் பரவிவிட்டது.அங்கு

அந்த அளவுக்கு–பல வீடுகளில் சமையல் செய்வதே அரிதாகி வருகிறது.தினமும் ஒருவேளை,இருவேளை ஓட்டலில் சாப்பிடுகிறார்கள்.அதற்கு காரணம்– 'பாஸ்ட் புட்' எனப்படும் இந்த மேற்கத்திய உணவு கலாச்சாரம்தான். சூடாக சாப்பிட விரைவு உணவு சுவையாகத்தான் இருக்கும்.சாப்பிடும்போது அதிலுள்ள தீங்குகள் தெரிவதில்லை. “இந்த 'பாஸ்ட் புட்' உணவுகளின் மறுப்பக்கம் மிகவும் பயங்கரமானது” என்கிறார்கள் இயற்கை மருத்துவர்கள். “நம் நாட்டில் சமீப காலமாகத் தான் இந்த உணவு கலாச்சாரம் மிக வேகமாகத் தான் இந்த உணவு கலாச்சாரம் பரவி வருகிறது.நகரங்களில் மட்டும் இல்லாமல் கிராமங்களைக்கூட இந்த 'பாஸ்ட் புட்' உணவுகள் அறிமுகமானபோது நல்ல நோக்கில்தான் இருந்தன.அனால் அதிக பாதிப்புகளும் ஏற்படவில்லை. அதாவது மக்களுக்கு சத்தான,ஆரோக்கியமான உணவை உடனடியாக கொடுக்கும் வகையில்தான் அறிமுகம் ஆனது. ஆனால் இங்கு நமது

உணவு கலாச்சாரம் இயற்கையை சார்ந்து இருந்தது.அந்த உணவு முறைகள் மாறி வருவது ஒருபுறம் இருந்தாலும்,நமக்கு 'பாஸ்ட் புட்' உணவுகள் சரியானவை அல்ல.நம் மக்கள் பாதிப்புகள் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் 'பாஸ்ட் புட்' உணவுகங்களில் அலைமோதி வருகிறார்கள். இப்போது தகவல் தொழில் நுட்பத்துறை அபார வளர்ச்சி கண்டிருக்கிறது.அந்தக் துறையில் பணியாற்றம் ஊழியர்கள் எண்ணிக்கையும் மிகவும் அதிகமாகி வருகிறது. அவர்களின் வாழ்க்கைமுறை,மேற்கத்திய முறைக்கு எளிதாக மாறிவிடுகிறது.அதுபோல் மேற்கத்திய பாணியிலான வேறு துறை சார்ந்த 'கார்ப்பரேட்' நிறுவனங்களும் அதிகமாகிவிட்டன.அதனால்,'பாஸ்ட் புட்' உணவு முறைகளும் இப்போது இங்கே பெருகிவிட்டன.ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும் சுவைக்கு அடிமையானவர்கள் மட்டுமே 'பாஸ்ட் புட்' உணவுகளை சாப்பிடுகிறார்கள்.அப்படிப் பட்டவர்களை விரைவிலேயே அதன் விளைவுகளை அனுபவிப்பார்கள்" "பாஸ்ட் புட்' உணவுகளால் உடலில் அதிக உடை போடும்.பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சனை போன்றவை ஏற்படும் அபாயம் உண்டு.அதோடு,இந்த வகை உணவுகளில் உடலுக்கு தேவையான நார்ச்சத்துக்கள் இல்லை.சர்க்கரை அதிகம் இருக்கிறது.

சாப்பிடும் உணவுகள் செரிமானமாக நார்சத்து மிகவும் அவசியம்.ஆனால்,இந்தவகை உணவில் அது இல்லாமலோ அல்லது மிகக் குறைவாகவோ இருக்கிறது என்பதுதான் உண்மை.மேலும் எண்ணெய் சத்துக்களும் இல்லை.இதனால் அதிக பாதிப்பு ஏற்படும்.உடலில் 'ஹார்மோன்' சமநிலையின்மை உருவாகும்.நீரிழிவு ஏற்படும் வாய்ப்பு உண்டு என்பதையும் மறுக்கமுடியாது. மேலும் இதில் ரசாயனப் பொருட்களும்



உள்ளன.எண்ணெயில் வதக்கும்,பொரிக்கும் உணவுகளால் வயிறு உப்புவது.ரத்தத்தில் அதிக கொழுப்பு சேருவது,ரத்த அழுத்தம் ஏற்படுவது போன்ற பாதிப்புகள் ஏற்படும்.மேலும் விரைவு உணவு சாப்பிடுபவர்கள்,தண்ணீர் குடிப்பது மிகவும் அரிது.அதற்குப் பதிலாக பாட்டில் பானங்களையே குடிக்கிறார்கள்.இது இன்னும் கேடு.

இதனால் எலும்புத் தேய்வு ஏற்படும்.பெண்களுக்கு மிக கடுமையான பாதிப்புகள் உண்டாகும்.விரைவு உணவு விரும்பிகள் காய்கறி சாலட்,பழ சாலட் போன்றவைகள் சாப்பிடலாம்.

அதுபோல் வேகவைத்த சுண்டல்கள் மிகவும் நல்லது.அதில் அனைத்துவிதமான வைட்டமின்களும் உள்ளன.செரிமானக் கோளாறுகளையும் தடுக்கும்"என்றார்கள் மருத்துவர்கள். தற்போது மேகி நுடுல்ஸ் கலப்படத் தன்மை கண்டுபிடித்பிறகு பல்வேறு உணவுப் பொருட்களில் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டுவருகிறது.அதே போன்று இந்த பாஸ்ட் புட் எனப்படும் விரைவு உணவையும் தடை செய்ய வேண்டும் என்பதே உணவுத்த தரம் அறிந்தவர்களின் என்னமாக உள்ளது.

# மோசடியில் இருந்து தப்பிக்க வீடு நிலம் வாங்குவோர் கவனிக்க வேண்டியது..



ஒரு காலத்தில் வீடு, நிலம் வாங்குவதும் விற்பனை செய்வதும் நேர்மையாகவும் நியாயமாகவும் இருந்தது பாண்டு பத்திரமில்லாமல் வாய்மொழியாகவே பல விவகாரங்கள் நடந்த காலமும் உண்டு ஆனால் தற்போது ஒருவர் பெயரில் உள்ள அசையா சொத்தை போலி ஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்யும் மோசடி அதிகரித்துள்ளது. ஒருவர் குருவி சேர்ப்பது போல் பணம் சேர்த்து கைக்கு எட்டிய நிலையில் வீட்டுமனை வாங்கி பதிவு செய்வார் பொருளாதார சூழ்நிலையால் சில காலம் கட்டிடம் கட்டாமல் இருப்பர்.

காலியாக இருக்கும் நிலத்தை நோட்டமிடும் வசதி படைத்தவர்கள், அரசியல்வாதி மக்கள் பிரதிநிதிகள் அல்லது அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பில் போலி ஆவணங்கள் தயாரித்து தங்கள் பெயரில் எழுதிக்கொள்ளும் சமூக கொடுமைகள் நடந்த வண்ணமுள்ளது. இந்த மோசடிகளை தவிர்க்க நிலம் பதிவு தொடர்பாக பல நவீன வசதிகள் அரசாங்கத்தால் உருவாக்கி இருந்தாலும் இடைதரகர்கள், ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபடுவோர் முன் எதுவும் நடப்பதில்லை இத்தகைய மோசடி கும்பல்களிடம் இருந்து தப்பிக்க இலவச சட்ட சேவை ஆணையம் வெளியிட்டுள்ள புத்தகத்தில் சில வழிகாட்டுதல்கள் கூறியுள்ளது. அதன் விவரம் வறுமாறு

நிலம் வாங்குவோர் செய்ய வேண்டியது:

1. ஒவ்வொருவரும் தங்கள் பொருளாதார நிலைக்கு ஏற்ற வகையில் பிள்ளைகளின் படிப்புக்கு வசதியாக பள்ளி, கல்லூரி, மருத்துவமனை அல்லது நர்சிங்ஹோம், போலீஸ் நிலையம் உள்பட முக்கிய வசதிகள் உள்ள பகுதியில் குறிப்பாக சுத்தமான குடிநீர் கழிவுநீர் மற்றும் மழைநீர் கால்வாய் சாலை தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உள்ள இடத்தில் வீட்டுமனை, வீடு அப்பார்ட்மெண்ட் உள்ளிட்ட அசையா சொத்துக்கள் வாங்க வேண்டும்.

2. வெறும் கையில் முழம்போடும் இடைதரகர்களை நம்பி செல்ல வேண்டாம்.

3. நீங்கள் வீட்டுமனை வாங்க தீர்மாணித்துள்ள லே அவுட் மாநகர பகுதியாக இருக்கும் பட்சத்தில் பெருநகர வளர்ச்சி குழுமம், நகரசபைகளாக இருக்கும் பட்சத்தில் நகர வளர்ச்சி குழுமம் ஆகியவற்றால் முறைப்படி பதிவு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ள லே அவுட்டா? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

4. குறிப்பாக வீடு அல்லது மனை வாங்கும் இடம் ஏற்கனவே அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட அல்லது

கையகப்படுத்துவதற்கான ஏற்பாட்டில் உள்ள நிலமாக இருந்தால் வாங்கக்கூடாது.

5. நீங்கள் வாங்க நீர்மாணித்துள்ள வீடு அல்லது வீட்டுமனை தொடர்பாக ஏதாவது வழக்கு போலீஸ் அல்லது நீதிமன்றத்தில் பதிவாகியுள்ளதா? என்பதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.

6. வாங்கும் நிலம் எவ்வளவு பரபரப்பளவில் உள்ளது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

7. தனியார் நிறுவனங்கள் அமைத்துள்ள லே அவுட்டாக இருக்கும் பட்சத்தில் அதை ஏற்படுத்தியுள்ளவர் முறைப்படி நகர வளர்ச்சி குழுமத்திடம் அனுமதி பெற்றுள்ளாரா? முறைப்படி பெற்றுள்ள ஆவணங்கள் அனைத்தும் சரியாகவுள்ளதா? நிலம் பதிவு செய்ததற்காக அரசாங்கத்திற்கு முறைப்படி செலுத்த வேண்டிய வரி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா? என்பதை முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும்.

8. நீங்கள் வாங்கும் அசையா சொத்துக்கு உண்மையான உரிமையாளர் யார்? அல்லது நிலத்திற்கான உரிமையை சட்டப்படி பெற்றுள்ள நபர் யார் என்பதை தெரிந்துகொள்வது மிகவும் அவசியமாகும்.

ஆவணங்கள் சரி பார்க்க வேண்டும்.

1. சொத்து மூல பத்திரம் (Parent Deed) ஒவ்வொரு சொத்துக்கும் மூல பத்திரம் மிகவும் அவசியமாகும் நீங்கள் வாங்கும் சொத்து பெரியளவில் இருந்தால் தற்போதைய உரிமையாளருக்கு அது எப்படி கிடைத்தது. அந்த விற்பனை செய்தவர் அல்லது தானமாக வழங்கியவர் உயில் மூலம் எழுதி கொடுத்தவர் யார்? அவருக்கு அந்த அதிகாரம் வழங்கியது யார்? அவருக்கும் நிலத்தின் மூல உரிமையாளருக்கும் உள்ள ரத்த சம்மந்தமான உறவு முறை என்ன? அவர் தாய்வழி உறவினரா? அல்லது தந்தை வழி உறவினரா? என்பதை தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக தாழ்த்தப்பட்ட பழங்குடியின வகுப்பினருக்கு சொந்தமான நிலம் வேறு சாதியினருக்கு விற்பனை செய்யக்கூடாது என்ற சட்டம் உள்ளது. அப்படி அந்த வகுப்பினருக்கு சொந்தமான நிலம் வாங்கி லே அவுட் போடப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும்.

நிலத்தின் உரிமையாளருக்கு நிலத்தின் உரிமை எப்படி வந்தது என்பதை உறுதி செய்யும் ஆவணங்கள் பார்க்க வேண்டும் (கிரயம் எழுதி கொடுத்த பத்திரம், பரிசாக வழங்கி இருந்தால் அதற்கான ஆவணம் உயில் எழுதி கொடுக்கப்பட்டிருந்தால் அதன் அசல் பத்திரம் ஆகியவை சரியாகவுள்ளதா? என்பதை பார்க்க வேண்டும்.

காத்தா பாத்திரம் (உரிமை பட்டா) : நிலம் யாருக்கு சொந்தமானது என்பதை உறுதி செய்து மாநகராட்சி, நகரசபை, பேரூராட்சி ஆகியவை வழங்கியுள்ள உரிமை பத்திரம் (அசல்) உள்ளதா? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

நில என்காம்ப்ரன்ஸ் சர்ட்டிபிகேட் : நிலத்திற்கான உரிமை பத்திரத்தை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பெற்றாலும் அதன் பத்திர பதிவு முழுவதும்



வருவாய்துறை அமைச்சகத்திடம் உள்ளது. நிலம் தொடர்பாக முழு விவரங்களை வருவாய்துறை அல்லது அதன் கீழ் இயங்கிவரும் பதிவாளர் அலுவலகத்தில் பரிசீலனை செய்து நிலம் உண்மையான உரிமையாளரின் பெயரில் உள்ளதா? என்பதை தீர்மானிக்க வேண்டும். பதிவாளர் அலுவலகத்தில் 12 முதல் 30 ஆண்டுகள் வரையிலான ஆவணங்கள் பெற முடியும் அதை முழுமையாக கேட்டு பெற்று பரிசீலித்து தீர்மானிக்க வேண்டும்.

சில இடங்களில் விவசாய நிலங்கள் வாங்கி லே அவுட் அமைத்திருப்பார்கள் அப்படி அமைக்கப்பட்ட நிலத்தை கிரீன் பெல்ட் நிலத்தில் இருந்து குடியிருப்பு நிலமாக மாற்றியமைக்க முறைப்படி அரசிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதா? உள்ளாட்சி அமைப்புகள் அதற்கான சான்றிதழ் வழங்கியுள்ளதா? என்பதை உறுதி செய்ய வேண்டும் சில ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் விவசாய நிலத்தை பறிமாற்றம் செய்யாமல் லே அவுட் போட்டு விற்பனை செய்வார்கள் அது பிற்காலத்தில் பெரியளவில் பாதிப்பு ஏற்படுத்துவதுடன் வாங்கிய சொத்தை இழக்கும் நிலைக்கு கொண்டு போய்விடும்.

நிலத்திற்கு உண்டான வரி செலுத்தப்பட்டுள்ளதா? என்பதை உறுதி செய்ய குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கான வரி கட்டண பில் உள்ளதா? என்று பார்க்க வேண்டும்.

லே அவுட் அமைப்பதற்கு வாங்கியுள்ள நிலத்தின் அளவு அது தொடர்பாக நகர உள்ளாட்சி அமைப்பு கொடுத்துள்ள அனுமதி பத்திரம் வீடுகள் கட்ட கொடுத்துள்ள தடையில்லா சான்றிதழ் குத்தகை உத்தரவாத பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை சரி பார்க்க வேண்டும்.



சிலர் தங்களுக்கு சொந்தமான சொத்தை விற்பனை செய்து கொடுக்கும் அதிகாரத்தை தனி நபருக்கு வழங்குவார்கள் அப்படி வழங்க பவர் ஆப் அட்டார்னி எழுதி கொடுப்பார்கள் அதை வைத்து கொண்டு லே அவுட் அமைப்பது அல்லது தனி நிலம் விற்பனை செய்வார்கள் அப்படி பவர் ஆப் அட்டார்னி பெற்றுள்ள நபர் உண்மையில் நில உரிமையாளரிடம் பிஓஏ எழுதி வாங்கியுள்ளாரா? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

கட்டிய வீட்டை வாங்கும் பட்சத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் உறுதியாக உள்ளதா? எந்த ஆண்டு கட்டப்பட்டது கட்டிடம் அமைக்க உள்ளூர் நகர உள்ளாட்சி அலுவலம் வரைப்படத்திற்கு அனுமதி வழங்கியுள்ளதா? அனுமதி பெற்றுள்ள வரைபடத்திற்கு ஏற்ற வகையில் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளதா? வீடு கட்ட நகர வளர்ச்சி குழுமத்திடம் முறைப்படி அனுமதி பெறப்பட்டுள்ளதா? அதற்கான முறையான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக வீடு தொடர்பாக ஏதாவது வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வருகிறதா? என்பதை அலசி ஆராய வேண்டும்.

வாங்கும் வீட்டின் மீது தேசியமயமாக்கப்பட்ட வங்கி தனியார் வங்கி அல்லது நிதி நிறுவனங்களில்

ஏதாவது கடன் வாங்கப்பட்டுள்ளதா? அல்லது வீட்டை அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார்களா? யாருக்காவது குத்தகை எழுதி கொடுத்துள்ளார்களா? தனி நபருக்கு சொந்தமான கட்டிடமா? அல்லது கூட்டு குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் பங்குள்ள சொத்தா? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

அப்பார்ட்மெண்ட் வாங்கும்போது அதன் நில உரிமையாளர் யார்? கட்டிடம் அமைக்க மாசு கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி வழங்கியுள்ளதா? மாநகராட்சி நகரசபை, நகர வளர்ச்சி குழுமங்கள் கட்டுமான பணிக்கு கட்டணம் பெற்று அனுமதி வழங்கியுள்ளதா? கட்டிடத்திற்கான பட்டா வரி கட்டண பில் உள்ளாட்சி அமைப்பில் பதிவு செய்துள்ளதா ஒருவரை உரிமையாளராக கொண்டதா? அல்லது கூட்டு சேர்ந்து கட்டியுள்ளதா? அறக்கட்டளை சொசையிட்டி சங்கம் போன்றவை பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதா? என்பதை துள்ளியமாக அலசி ஆராய்ந்து சரி பார்த்தபின் வாங்க வேண்டும்.




பத்திர பதிவு: இதற்கு முன் பத்திர பதிவு கட்ப்யூட்டரில் செய்யாமல் எழுதி கொடுக்கும் வழக்கம் இருந்தது. அப்போது ஒருவருடைய சொத்து இன்னொருவர் பெயரில் எழுதி கொடுக்கும் மோசடி நடந்தது. கடந்த 1994ம் ஆண்டு நாட்டில் முதல் முறையாக கர்நாடக மாநில வருவாய்துறை அமைச்சகம் நில ஆவணங்கள் அனைத்தும் கம்ப்யூட்டரில் பதிவு செய்யும் திட்டம் அமல்படுத்தியது. இதற்காக தனியாக குழு அமைத்து பழைய ஆவணங்கள் அனைத்தும் திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது. அதன்பின் ஆன்லைன் பதிவு வசதி கொணடுவரப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஓரளவுக்கு நில மோசடி தடுக்கப்பட்டது. தற்போது நிலம் விற்பனை செய்வோர் நிலம் வாங்குவோர் அனைவரும் கம்ப்யூட்டரில் பொருத்தப்பட்டுள்ள வெப் கேமரா மூலம் படம் பிடிப்பதுடன் கம்ப்யூட்டர் உதவியுடன் கை நாட்டு வைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர நிலம் அல்லது வீடு விற்பனை செய்வோர் குடும்ப தலைவர் முதல் சொத்தின் வாரிசுதாரர்கள் அனைவரும் விற்பனை பத்திரத்தில் கையெழுத்திடும் சட்டமும் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது நில மோசடி குறைந்து வருகிறது. நிலம் வாங்குவோர் புகைப்படத்துடன் கம்பியூட்டரில் பதிவு செய்ய வேண்டும். நில உரிமையாளர் உள்பட அதன் வாரிசுகள் அனைவரும் கையெழுத்திட்ட பின் தான் தங்கள் பெயரில் பதிவு செய்ய வேண்டும். இந்த வழிமுறைகள் பின் தான் தங்கள் பெயரில் பதிவு செய்ய வேண்டும் இந்த வழிமுறைகள் பின்பற்றினால் நில மோசடியில் இருந்து தப்பிக்க முடியும்.

# ஜனநாயகமே உன் விலை என்ன?

வேலூர் மாவட்டத்து வெள்ள மண்டிக்காரர் இவற்றைக்கு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் வியாபாரிகள் பற்றி கீழ் வருமாறு கூறினார்.

"பரிமார வந்தவர்கள் பசி ஆறி விட்டார்கள்"

அவர்கள் பரிமாற வந்தவர்கள் அல்ல பசியார வந்தவர்களே, பரிமாற வந்தவர்கள் பாவணையில் சத்திரத்து சாப்பாட்டை சந்தக் கவிபாடிக் கொண்டே சந்தடி இல்லாமல் சுரண்டி விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டார்கள். எஞ்சியது ஏப்பமே, மிஞ்சியது ஏதுமில்லை ஏப்பக்குரள் கேட்டு சிம்மகுரள் கொடுத்தோடு சிறுசிறு நரிகள் எச்சத்திற்காக ஏங்கும் ஓநாய்கள்



வாண்வழியை தன் வழியாக்கி வட்டமிடும் வள்ளூர்கள் அத்தனையும் சோரம் போக வாலாக இருந்தால் வாய் வீச்சு வாள் வீச்சாகி அதிலொரு வீச்சு தன் தலையை தெறிக்க செய்யுமோ என்று அச்சப்பட்டு அணி அமைப்போம் வாரீர் கூட்டு அணி அமைப்போம் வாரீர் ஆனால் நம் கட்சியில் காட்டாட்சியில் கூட்டாட்சிக்கு இடமில்லை என்று பகரிட வந்தது சினம்.

சிறு நரிகள் சிந்திக்க தொடங்கி ஓநாய்க்கு விருந்து அளித்து செந்நாய்க்கு அழைப்பு விடுத்து கிளைக்கு கிளை தாவும் மந்திக்கும் மாலை சூட்டி எத்திக்கும் ஓலம் இட்டு ஜனநாயகம் கான கலம் புகுவோம் வாரீர் என்று அழைத்திட தனித்தே இயங்குவோம் தருதலைகள் அணி சேர்ந்து இனம் மானம் காத்திட அருந்து போன தொப்புள் கொடியை அறுவை சிகிச்சை மூலம் ஒட்ட வைத்து எமது தொப்புள் கொடி உறவுகளை வீரு நடைபோடுவோம் வெற்றிக் காண்போம் நாலைநமதே என்று முழக்கம் இட்டு தடியுடன் கொடியேந்தி சந்திக்கு சந்தி வாக்களிப்பது ஜனநாயகம் கடமை என்று தத்துவ மொழி பொழிந்தன.

சாமானியர்கள் சமநிதிக்கு குரல் கொடுப்போர் அன்றாடம் காய்ச்சிகள் உழைப்பவர்கள், பிழைப்பவர்கள், உழைப்புக்கும், பிழைப்புக்கும் விலை நிர்ணயிப்பவர்கள் எல்லோரும் கூடி ஓட்டு என்றால் என்ன? அதன் என்ன மாய் மாலமா வெற்றிக்குரிய வீரவாள் அல்லவோ வெண்சாம்மரம் வீசியது போதும் புலிகளே பிரப்படுங்கள், சிறுத்தைகளே சீருங்கள் சிங்கங்களே எமது தங்கங்களே முரி முழங்கி புரப்படுங்கள் கலம் புகுவோம் ஊழலற்ற சமதர்மம் அமைந்திட வெற்றிக்காண்போம் என்று வாய் சாலம்பேசி வாய்வீச்சில் அரசியல் வியாபாரிகளை அலறவைத்து ஜனநாயக பாதையில் கூடிபேசி நல்லிணக்கத்திற்கு வழிவகுத்து நல்லதோர் பேரம் பேசி ஊர்கூடி தேர் இழுப்போம் என்று ஜனநாயக தேர் இழுத்தபோது " அந்தோ நிலைக்கு சேறும் முன்னே ஜனநாயக தேர்தான் கவிழ்ந்ததம்மா, ஜனநாயக அச்சு முறிந்ததம்மா, அச்சாணி இல்லாமல் உச்சாணி போக நினைத்த அறிவிலர்கள் தான் காணமல் போனால், தர்மதேவதை புள்ளர்களின் சிறுமதி கண்டு சினந்தழுந்து சிரித்த போது புல்லிணங்கள் கிச்சு கிச்சு என்று மண்ணின் மரக்கிளையிலிருந்து புதியதோர் உலகம் தேடி விண்ணில் விரைந்தது அம்மா.



-தொகுப்பு பூவைஇலா ரமேஷ்
7299662900

# நீதி செழித்த நாடு ஓங்கிய குரல் ஒலிக்கட்டும்



சுய சிந்தனை, சுய நலமற்ற சேவை, மனித நேயம் காத்தல், நீதி வேண்டுதல், ஆணவம் விட்டொழித்தல், கடமையில் கண்ணியம், பிறரை பழிவாங்கும் மனவெறுப்பு விட்டொழித்தல், இறை நம்பிக்கையோடு கூடிய பொறுத்தருளும் பெருந்தன்மை, இவைகளால் மட்டும் மனிதனின் மனத்தில் இறை ஞானம் தெளிவாகும்.பணம் சம்பாதிப்பது மட்டுமே வாழ்கை அல்ல. தான் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதி ஏழ்மைக்குப் பயன்படவேண்டும். இதுவே பாவம் போக்கும் வழியாகும். எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பதல்ல வாழ்க்கை, எத்தனை பேர் மனதில் இனிமையாக நிறைந்தோம் என்பதே பிறப்புக்கு பெருமை. முதியோர் இல்லங்கள் சென்று பார்த்தால் இறைவன் திருவிளையாடல் அறிந்து கொள்ளலாம். துன்பத்தின் பல வடிவங்கள் அங்கே காணலாம். அங்கே சென்று நாம் பிள்ளை மனம் தரவேண்டும். அனாதைக் குழந்தைகள் இல்லம் சென்று பாருங்கள், அன்னை மனம் தந்து இறைவன் திருவருளைஅடையாளம் காட்டுங்கள்.

ஊனமுற்றோர் குழந்தைகளைப் பாருங்கள், கை, கால்கள் ஊனம் இல்லாத தன்மையை தனக்குத் தந்த இறைவனை எண்ணி வணங்கி நன்றி கூறி அவர்களுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள். துன்பம் எங்கே என்று தேடுங்கள், ஆறுதல் தந்து ஆனந்தக் கண்ணீர் காணுங்கள். மனிதனும் தெய்வமாகலாம் என்றுதான் சொல்லியுள்ளார்கள், மிருக குணம் தாங்கி வரும் மனிதனாக வாழாதீர்கள். அன்பின் இனிமையை அறிய முடியாமல் மனதில் இறுமாப்பு சுமை சுமந்து வாழ்க்கையை சுவைக்கத் தெரியாமல் கசந்து வாழாதீர்கள். பேதமை ஒழியவில்லையெனில் பிறந்த பிறப்பிற்கே அவமானம், மனிதன் என்று சொல்லுவதற்கு ஏது தன்மானம்.

படித்த இளைஞர்கள் தன் படிப்பை சமுதாயம் வாழ பயன்படுத்துங்கள். இளைஞர்கள் தன் வாழ்வை மக்கள் சேவையில் ஈடுபடுத்த தனி அமைப்பு உருவாக்குங்கள். மக்கள் ஏமாற்றப்படுவதை எதிர்த்து போராடி, நீதியை நிலை நாட்ட உங்கள் சக்தியைப் பயன்படுத்துங்கள். உங்கள் நீதியின் நடவடிக்கையால் எல்லா நிர்வாகங்களும், துறைகளும் நீதி வழியில் நிமிர்ந்து நடக்கச் செய்யுங்கள்.

பெண்ணின் மனதில் இடம் பிடிப்பது வரலாறா, பெண்மையைக் காப்பாற்றும் ஆண்மையை அடையாளம் காட்டி உலகை உங்களை உற்று நோக்க வைப்பது பெருமைக்குரிய வரலாறா என உணர்ந்து சமுதாயம் வாழ பாடுபடுங்கள். மக்களின் எதிர்காலம் அமைதியும் மகிழ்ச்சியும் கொண்டதாக அமையட்டும். துன்பம் துரத்த தூய மன நிலை பெறட்டும். அதற்கு இளைஞர் சமுதாயம் உதவட்டும்.இளைஞர்கள் போர்க் குணம் படைத்த இந்தியாவின் தளபதிகள் ஆகட்டும், மக்கள் மணிமுடி இல்லாத மன்னர்களாக வலம் வரட்டும்.

இதுவே எங்கள் நீதி செழித்த நாடு என ஓங்கிய குரல் ஒலிக்கட்டும்.



S.கணேசன்.
காஞ்சிபுரம்



# நேர்மையற்ற வணிக நடைமுறைகள்

**- ஒரு எச்சரிக்கை ரிப்போர்ட்.**

கிட்டதட்ட நமது கண்ணை மறைக்கும் சாதனையை செய்து வருகின்றன. நுகர்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள். நுகர்வோராக நீங்கள் இந்த வித்தியாசத்தை உணர்ந்திருக்கக்கூடும். அதை உணராதவர்கள் இதை படித்த பிறகு இன்னும் எச்சரிக்கையாக இருக்கலாமே? நாம் வழக்கமாகப் பயன்படுத்தும், சோப், பற்பசை, ஷாம்பு மற்றும் தினசரி பயன்படுத்தும் இதர பொருட்களின் விலையை ஏற்றிவிட்டால் என்ன செய்வோம். அந்தப் பொருளை பயன்படுத்துவதை விட்டுவிடுவோம். அல்லது அந்த பொருளுக்கு நிகரான தரத்தோடு குறைந்த விலையில் வேறு நிறுவனப் பொருளை பயன்படுத்த தொடங்குவோம்.பிராண்டை மாற்ற முடியாத அளவுக்கு பழகிவிட்டோம் என்றால் மட்டுமே அந்த பொருளைத் தொடர்ந்து வாங்குவோம்.

பொருளுக்கான விலையை ஏற்றும் உத்தி என்பது நிறுவனங்கள் கடைபிடிக்கும் உத்திகளில் ஒன்று. இது அவர்களின் உரிமை.பொருளுக்கான தயாரிப்புச் செலவுக்கு ஏற்ப விலையைத் தீர்மானிக்கச் சட்டம் அவர்களுக்கு இந்த உரிமையைக் கொடுத்துள்ளது. ஆனால் இந்த உத்தியால் வாடிக்கையாளர்களை இழக்கும் அபாயமும் நிறுவனங்களுக்கு இருக்கிறது. இந்த அபாயத்தைச் சந்திக்க தயாராக இல்லாத நிறுவனங்கள் குறுக்கு வழியில் கண்டுபிடித்த உத்திதான் விலையை ஏற்றாமல், அளவு அல்லது எடையைக் குறைக்கும் உத்தி.

இந்த எடைக்குறைப்பை அவ்வளவு எளிதில் கண்டுபிடித்துவிட முடியாது. பளிச்சென்று எந்த வித்தியாசமும் தெரியாது. நீங்கள் உன்னிப்பாகக் கவனித்தால் மட்டுமே இதைக் கண்டு பிடிக்க முடியும். எந்த அறிவிப்பும் இல்லாமல் இப்படிச் செய்வது வாடிக்கையாளர்களை ஏமாற்றும் உத்தி ஆகிவிடாதா? இது குறித்து ஒரு நிறுவனத்தின் விற்பனை மேலதிகாரியிடம் கேட்டோம். எடை குறைப்பு செய்வதால் வாடிக்கையாளரை நாங்கள் ஏமாற்றுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அந்த பொருளின் எடை, அளவு அதற்கான விலை போன்ற விவரங்களை வழக்கம் போல பொருளின் பேக்கிங்கில் தெளிவாக அச்சடித்துதான் தருகிறோம் வாடிக்கையாளர்கள் அதைப் பார்த்து விட்டுதான் வாங்குகின்றனர்.

பொருளும் தேவை, விலையும் வாங்குவதுபோல இருக்க வேண்டும் இதுதான் வாடிக்கையாளர்களை ஈர்க்கும் விஷயம். எடை கொஞ்சம் குறைந்தாலும் பரவாயில்லை என்பதுதான் மக்கள் எண்ணம். அவர்களை ஏமாற்றும் எண்ணம்

### எப்படி கண்டுபிடிப்பது?

வழக்கமாக 100 கிராம் சோப் என்று நினைத்து வாங்குவோம்.90 கிராம்தான் இருக்கும்.50 கிராம் பேஸ்ட் என்று நம்பி வாங்கினால் 40 கிராம்தான் பேக் செய்யப்பட்டிருக்கும். அதற்குத்தான் விலை குறிப்பிட்டிருப்பார்கள். இதற்கு முன்பு 100 கிராமும் 50 கிராமும் என்ன விலையில் விற்பனை ஆனதோ அதே விலையில் தற்போது 40 கிராமும் 90 கிராமும் விற்பனை செய்யப்படுகிறது.

சோப்பு, பேஸ்ட், டீ தூள், பிஸ்கட் முதல் மசாலா பொருட்கள் வரை அனைத்திலும் இந்த வகையிலான எடை குறைப்பு வித்தை சத்தமிலாமல் நடந்து வருகிறது. இதில் நிறுவன பேதமே கிடையாது பெரும்பாலும் அனைத்து நிறுவனங்களுமே இந்த உத்தியைக் கடைப்பிடிக்கின்றன

எங்களுக்கு அறவே இல்லை என்றார். கலப்பட பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களால் ஏமாறும் மக்களை முன்னணி நிறுவனங்களும் தங்கள் பங்குக்கு இதுபோன்ற எடைக் குறைப்பு செய்து ஏமாற்றுகிறதோ என்று எண்ணத்தோன்றுகிறது. மூலப் பொருட்களின் விலை ஏறுவதும், போக்குவரத்து மற்றும் விநியோக செலவுகள் அதிகரிப்பதும் நிறுவனங்களுக்கு விலை ஏற்ற வேண்டிய கட்டாயத்தை உருவாக்குகிறது என்றால் அதை மக்களுக்கு விளக்க வேண்டிய கடமை நிறுவனங்களுக்கு இருக்கிறது.

தவிர துணை அறிவிப்பு இல்லாமல் எடை குறைப்பதற்கு சட்டமும் அனுமதிக்கிறது. முன்பு 25 கிராம் 50 கிராம் என்று ரவுண்டாகத்தான் எடை இருக்க வேண்டும் என்று இருந்த சட்ட விதிகளை தளர்த்தப்பட்டுள்ளன. 7 கிராம், 14 கிராம், 48 கிராம் என பேக்கிங் செய்து கொள்வதற்கு ஏற்ப சட்டமும் சாதகமாக உள்ளது. இதை பேக்கிங்கில் அச்சடித்தால் போதும் என்பதுதான் நிலைமை. எனவே நுகர்வோர் கொஞ்சம் கவனமாகவே இருக்க வேண்டியிருக்கிறது.

சில பிராண்டு பொருட்களில் எடை குறைத்தது மட்டுமல்ல, விலையையும் அதிகரித்துவிட்டனர். உதாரணமாக ஒரு முன்னணி பிராண்ட் சோப் முன்பு 100 கிராம் இருந்தது என்றால் இப்போது 90 கிராம்தான் உள்ளது. விலையையும் உயர்த்தி உள்ளனர். வழக்கமாக வாங்கும் பொருள் பழக்கப்பட்ட பிராண்ட் என்கிற நம்பிக்கையில்தான் அந்த பொருட்கள் நுகர்வோரை ஈர்க்கிறது. சோப்பு, ஷாம்பு, எண்ணெய் போன்ற தினசரி பயன்படுத்தும் பொருட்களில் குறிப்பிட்ட பிராண்டுக்கு பழகிவிட்டால் மாறுவதற்கு மனசு இருப்பதில்லை. விலை ஏறினாலும் அந்தப் பொருட்களைத்தான் விரும்புகின்றனர் நுகர்வோர்கள். அவர்களின் கேள்வி இதுதான் சலுகை என்றால் டமாரம் அடிப்பதும் எடை குறைப்பை வெளியில் சொல்லாமல் கமுக்கமாக செய்வதும் ஏன்?

நுகர்வோர்கள் விழிப்போடு இருப்பது ஒன்றுதான் இதற்கு ஒரே வழி.

– நன்றி தமிழ் இந்து.

## ஏமாற்றும் உத்தியா?

விலை ஏற்றினால் வாடிக்கையாளரை இழக்கலாம் என நினைக்கும் நிறுவனங்கள் இந்த உத்தியை நேரடியாக நுகர்வோரிடத்தில் சொல்லலாமே என்கிற கேள்வி எழுகிறது. 50 காசு விலை குறைந்தால் பல லட்சம் செலவு செய்து விளம்பரம் செய்யும் நிறுவனங்கள் இந்த விஷயத்தை மட்டும் ஏன் இருட்டடிப்பு செய்கின்றன.



## இருக்கும்... ஆனால் இருக்காது...

விலையும் ஏற்றக்கூடாது, லாபமும் குறையக்கூடாது, தரத்தில் சறுக்கக் கூடாது, வாடிக்கையாளர்களையும் இழக்கக்கூடாது என்கிற பலமுனை யோசனைகளிலிருந்து நிறுவனங்கள் இந்த உத்தியை கடைப்பிடிக்கின்றன. பிஸ்கட்டின் வழக்கமான அளவை விட சற்று சிறிய சைஸ் ஆக இருக்கிறது என்று தோன்றுகின்றதா... இதுதான் அந்த இருக்கும்... ஆனா இருக்காது...

# அதிகரிக்கும் ஆன்லைன் வர்த்தகம்...!

ஆன்லைன் மூலமாக பொருட்கள் வாங்குபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. புத்தகங்களில் ஆரம்பித்த ஆன்லைன் வியாபாரம் இப்போது கார், இருசக்கர வாகனம், வீடு வாங்குவது வரை வளர்ந்திருக்கிறது, நம்முடைய நேரத்தை, பணத்தை மிச்சப்படுத்தும் ஆன்லைன் வர்த்தகத்தை நமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வது எப்படி? என்று தெரிந்து கொள்ளலாம்.

இணையதளம்

பல இணையதளங்கள் பொருள் களை விற்றாலும் பாது காப்பான இணைய தளம் மூலம் பொருட்களை வாங்குவது நல்லது. ‘https’ என்று ஆரம்பிக்கும் இணையதளம் பாது காப்பானவை. சில இணையதளங்களை தவிர்க்கவும். இதுபோன்ற இணையதளங்கள் மூலம் உங்களது தகவல்கள் திருடப்படும் வாய்ப்பு அதிகம்.




வை–பை

அதேபோல பொது இடங்களிலோ அல்லது இலவசமாகக் கிடைக்கும் வை–பை பயன்படுத்துவது நமக்கு விருப்பமானதாக இருக்கலாம். ஆனால் அதனை பயன்படுத்தி பொருட்கள் வாங்குவதைத் தவிர்கவும்.இவை மூலம் உங்களது தகவல்கள் திருடுபோகலாம். அதேபோல பயன்படுத்தும் கணிப்பொறியில் சரியான Anti Virus –யை பொறுத்தவும்.

கிரெடிட் கார்டு

அனைத்து விதமான ஆன்லைன் வர்த்தகத்துக்கும் ஒரே கிரெடிட் கார்டை பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் என்ன பொருட்கள் வாங்கி இருக்கிறோம், எவ்வளவு வாங்கி இருக்கிறோம் என்பதை மதிப்பிட முடியும். மேலும் குறைந்த தொகையாக இருக்கும் கிரெடிட் கார்டை பயன்படுத்தவும்.ஒரு வேளை எதாவது தவறு நடக்கும்பட்சத்தில் குறைந்த நஷ்டம் ஏற்படும். அதேபோல ஆன்லைன் வர்தகத்துக்கு டேபிட் கார்டை விட கிரெடிட் கார்டையே பயன்படுத்தவும். டெபிட் கார்ட் பயன்படுத்தும் போது சமயங்களில் ஆர்டர் முழுமையாகி இருக்காது ஆனால் பணம் எடுக்கப்பட்டிருக்கும். சில நாட்களுக்குள் வங்கி கணக்கு வந்தாலும், உடனடி செலவுக்கு கஷ்டப்பட வேண்டி இருக்கும். ஆனால் கிரெடிட் கார்டில் இந்த பிரச்சனை கிடையாது.

கவனம் தேவை

ஆன்லைனில் பொருட்கள் வாங்கும் போது நாம் எங்கேயும் அலையப் போவதில்லை நம்முடைய நேரம் மிச்சமாகும், பணமும் மிச்சமாகும். மேலும் கார்டு மூலம் பணம் செலுத்துவதால் இவ்வளவு தொகையை செலவழிக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் பொருட்களை வாங்கி விடுவோம்.

உளவியல் ரீதியாக பணத்தை கையால் தொட்டு புழங்கும்போது எச்சரிக்கையாக இருக்கும் நாம் கார்டு மூலம் செலவழிக்கும் போது அந்த கவனம் இருக்காது. இதனால் தேவையற்ற பொருட்களை அதிகமாக வாங்கிக் குவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. தவிர மொபைல் போன் உள்ளிட்ட எலெக்ட்ரானிக் பொருட்களை குறைந்த

காலத்தில் மாற்றும் வாய்ப்பு இருப்பதால் சுயகட்டுப்பாடு தேவை. இல்லையெனில் ஒவ்வொரு மாதம் வரும் சம்பளத்தை கிரெடிட் கார்டுக்கு மட்டுமே செலுத்தவேண்டியதாக இருக்கும்.

விலை வேறுபாடுகள்


நிறைய இணையதளங்கள் வந்துவிட்டதால் விலைகளை ஒப்பிட்டுப் பார்த்து வாங்குவதன் மூலம் லாபம் கிடைக்கும். விலையை ஒப்பீடு செய்வதற்குக் கூட சில இணையதளங்கள் இருக்கின்றன. அதுபோன்ற இணைய தளங்களுக்குச் சென்று முடிவு செய்யலாம்.

சில இணையதளங்கள் கூரியர் கட்டணம் வசூலிப்பார்கள். சில நிறுவனங்கள் இலவசமாக டெலிவரி செய்வார்கள். அதனால் பொருட்களின் விலையை மட்டும் பார்க்காமல் மொத்தமாக எவ்வளவு செலவாகிறது என்பதை பொறுத்து எந்த இணையதளத்தில் வாங்கலாம் என்பதைப் முடிவு செய்யுங்கள்.

வாரண்டி உள்ளிட்ட ஒவ்வொரு நிறுவனத்தின் நிபந்தனைகளைச் சரியாக படித்துப் பாருங்கள். அதாவது, கேஷ் ஆன் டெலிவரி பொருளை திருப்ப அனுப்புவது, வாரண்டி உள்ளிட்ட விஷயங்களில் என்ன விதிமுறை, பொருட்கள் எப்போது கிடைக்கும் என்பது உள்ளிட்ட விஷயங்களை கவனிக்கவும். மேலும் ஆன்லைன் மூலம் வாங்கியவை சம்பந்தமாக ஆவணங்கள் பத்திரமாக வைத்துக்கொள்ளவும்.

– க.உமாபதி

# முன் கூட்டியே மின் கட்டணம் செலுத்தும் திட்டத்தில் 10 லட்சம் மின் நுகர்வோர்கள்... 200 கோடி ரூபாய் வைப்பு நிதியாக வைத்துள்ளனர்.



தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மின் தொழில், வணிகம், விவசாயம் என மொத்த 2.53 கோடி மின் நுகர்வோர் உள்ளனர் இதில் விவசாய மின் இணைப்புக்கு மட்டும் இலவச மின்சாரம் வழங்கப்படுகின்றது. மின் வாரியம் சார்பில் வீடு 60 நாட்கள் மற்ற இணைப்புக்கு 30 நாட்களுக்கு ஒரு முறை மின் பயன்பாடு கணக்கு எடுக்கப்படுகிறது. மின் பயன்பாடு கணக்கு எடுக்கப்பட்டதில் இருந்து 20 நாட்களுக்குள் மின் கட்டணத்தை செலுத்த வேண்டும். மின் பயன்பாடு கணக்கு எடுக்க மின் வாரிய ஊழியர்கள் வரும்போது பலர் வீடுகளில் இருப்பதில்லை இதனால் மின் கட்டணம் செலுத்த மறப்பதால் அபராதத்துடன் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதை தவிர்க மின் வாரியம் சார்பில் முன் கூட்டியே மின் கட்டணம் செலுத்தும் திட்டம் 2011ல் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மின் இணைப்புகளில் மின் பயன்பாடு கணக்கு எடுப்பதற்கு முன் மின் நுகர்வோர் குறிப்பிட்ட தொகையை மின் கட்டணத்திற்காக மின் கட்டண மையங்களில் வைப்பு நிதியாக செலுத்த வேண்டும். அதற்கு ஒரு மாதத்திற்கு 0.5 சதவீதம் என ஓர் ஆண்டிற்கு 6 சதவீகிதம் வட்டியை மின் வாரியம் வழங்குகிறது. இத்திட்டத்தில் இதுவரை 10 லட்சம் மின் நுகர்வோர் 200 கோடி ரூபாய் வைப்பு நிதியாக செலுத்தி உள்ளனர்.

–ஊர்க் குருவி

# சென்னை மாவட்ட செய்திகள்

















தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு மற்றும் அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகத்தின் சார்பில் இன்று (02.01.2022) சென்னை எழும்பூரில் உள்ள SRMU அரங்கில் நுகர்வோர் புத்தாண்டு விழா தலைவர் செ.பால்பர்ணபாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது, இதில் மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# பெருமையுடன் வாழ்த்துகிறோம்...!


NLUD DELHI

NLUD202167

CERTIFICATE OF PARTICIPATION

*This is to certify that*

*Mr. Suresh Kumar Manoharan* of *Tamil Nadu Consumer Protection Organisation, Chennai* has successfully completed the ***Five Days Online Certificate Course on Consumer Law & Practice*** organized by the Chair on Consumer Law at National Law University Delhi (Established by Ministry of Consumer Affairs, Food and Public Distribution, Government of India) from August 02-06, 2021. We wish for his/ her bright future.

Course Coordinator:
Dr. Sushila
Project Director, Chair on Consumer Law
National Law University Delhi

நமது பேரமைப்பின் தேசிய நிர்வாக ஆலோசகரும், மடிப்பாக்கம் கிளை தலைவருமான *திரு.M. சுரேஷ் குமார்* அவர்கள் மத்திய அரசின் நுகர்வோர் பாதுகாப்பு விவகாரத்துறை நடத்திய " *நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சட்டங்கள்"* குறித்த ஐந்து நாட்கள் *இணையதள பயிற்சி பட்டறையில்* நமது பேரமைப்பின் சார்பாக பங்கேற்று சான்றிதழ் பெற்றுள்ளார், அவரை நமது பேரமைப்பின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சார்பாக பெருமையுடன் பாராட்டுகிறோம்.

இப்படிக்கு

**செ. பால் பர்ணபாஸ்**
தலைவர்


PRAISE THE LORD

Cell : 8940056880
9786449190
7339060079

# SHALOM

CATTERING SERVICES

All Type of Function Undertaken Here



Prop: J.Ashok

Life Member : TamilNadu Consumer Protection Organization and
All India People Rights Protection Organization
News Reporter : Tamil Nadu Nugarivizhi and Consumer Today

No. 6/B, Sivaraj St street, Old Pallavaram, Chennai-117



Published by : C. Paul Barnabas. on behalf of Tamilnadu Consumer Protection Organisation, Chennai.
From its Office at No.2, Thirumuruga Nagar, Kolathur,Chennai - 600 099.
Printed by : Mr. H. Dhanasekaran at Sekar Offset Printers
No.168, Big Street, Triplicane, Chennai - 600 005.
Editor : Dr. N. Kanniah,*Phd*



**Head office : No.359 G, Konnur High Road (Pill Kington Road Junction) Ayanavaram,
Chennai - 600 023. Tamilnadu, India.(Near Sayani Bus Stop & Sangeetha Mobiles )
Phone : 044 - 4332 4844, Cell : 99419 44999 / 94449 09993
E-mail : presitncpo@gmail.com, Website : www.tncpo.com, Facebook : TNCPO Chennai**

# தமிழ்நாடு நுகர்வோர் மாத இதழின் வாசகர்களுக்கு இனிய கிறிஸ்துமஸ் - புத்தாண்டு நல்வாழ்த்துகள்!



**P.ஜேம்ஸ்விக்டர்ராஜ்குமார்**
சட்ட ஆலோசகர்
97907 12304



**M.ரமேஷ்குமார்**
மாநில இளைஞரணிச் செயலாளர்
98410 98983



**T.ராஜேஷ்**
மாநில துணை ஒருங்கிணைப்பாளர்
மற்றும் பெரும்பாக்கம் கிளைத் தலைவர்
74016 66677



**P. திருமாறன்**
வடசென்னை மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்
95001 44554



**S.யோகேஷ்வரி நாயுடு**
தென் சென்னை மாவட்ட இணைச்செயலாளர்
மகளிர் மற்றும் குழந்தைகள் அணி
98331 26863



**S.சுபாஷினி**
மத்திய சென்னை மாவட்ட அமைப்பாளர்,
மகளிர் மற்றும் குழந்தைகள் அணி
99412 49377



**R.தேவி**
ரெட்ஹில்ஸ் கிளைத் தலைவர்
81246 50257



**ராமலஷ்மி ராம்குமார்**
வடசென்னை மாவட்ட து.செயலாளர்
87545 07035



**S.ராஜேந்திரன்**
மாநில பொதுக்குழு உறுப்பினர்
91762 93525



**V.M.கனிசெல்வம்**
தென் சென்னை மாவட்டத் தலைவர்
மாநில நிர்வாக பொ.கு.உறுப்பினர்
98408 27182



**B. நிதிஷ்குமார்**
மாநில துணை ஒருங்கிணைப்பாளர்
மடிப்பாக்கம் கிளை இ.செயலாளர்
88255 53646



**H. அப்துல்லா செரீஃப்**
மடிப்பாக்கம் கிளை து.செயலாளர்
98846 76417



**M.செல்வக்குமார்**
சேப்பாக்கம் கிளைச் செயலாளர்
63698 13901



**A. ராமதாஸ்**
மாநில பொதுக்குழு உறுப்பினர்
99419 87794



**S. கோபாலகிருஷ்ணன்**
மாநில புரவலர் (ம)
திருவல்லிக்கேணி கிளை நிர்வாகி
72003 10906



**P. நவநீதன்**
மாநில துணை அமைப்பாளர்
97911 02345

## பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள்

ADVT

TAMILNADU NUGARVIZHI (Tamil Monthly) Registered News Paper - R.N.I. No: TN/T AM/2007/23434, Postal Registration No: TN/TBM/118

# தமிழ்நாடு நுகர்விழி மாத இதழின் வாசகர்களுக்கு
# இனிய கிறிஸ்துமஸ் - புத்தாண்டு நல்வாழ்த்துகள்!



**D. ரமேஷ்பாபு**
மாநில துணைச் செயலாளர்
93808 88883



**M.வருண்பிரசாத்**
மாநில துணை அமைப்பாளர்
88257 39714



**M.முரளிகிருஷ்ணன்**
மாநில துணை அமைப்பாளர்
91714 05510



**V. சுகிர்தயராஜ்**
மாநில துணைச் செயலாளர்
90443 90443



**S.கண்ணன்**
மாநில புரவலர் மற்றும்
இறை வழிபாட்டுக்குழுத் தலைவர்
91710 47825



**R.முத்துக்குமரன்**
தென் சென்னை மாவட்ட அமைப்பாளர்
99400 42423



**V.பிரகாஷ்**
தெ.செ. மாவட்டச் செயலாளர்
96001 61667



**மேக்ஸ்வெல் எபனெட்டஸ் ராபர்ட்ஸ்**
மாநில துணைச் செயலாளர்
94442 23704



**விஜய் சாய்**
தேசிய அமைப்புச் செயலாளர்
98404 10168



**S.மோகன்**
வடசென்னை மாவட்ட இணைச்
செயலாளர், தொழிலாளர் அணி
98406 19321



**T.M.ஞானசேகர்**
சோழிங்கநல்லூர் கிளைத் தலைவர்
98847 97407



**H.V. சீத்தாராமன்**
வட சென்னை மாவட்ட நிர்வாக ஆலோசகர்
92442 12197



**J. கோபாலகிருஷ்ணன்**
காஞ்சிபுரம் மாவட்ட இணைச் செயலாளர்
81247 56257



**A. சத்தியா**
திருவள்ளூர் மாவட்டப் பிரதிநிதி
94448 91479



**V. புவனேஷ்வர்**
தென் சென்னை மாவட்ட நிர்வாகி
90425 64267



**M.மணீஷ்குமார்**
வடசென்னை மாவட்ட செய்தி நிருபர்
98413 99998

## பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள்

ADVT